

# கல்வெட்டு

## KALVETTU

திருவள்ளுவராண்டு 2036 (பார்த்திப ஆண்டு) ஆடித்திங்கள்





ஆண்டிப்பட்டி அகழாய்வில் கிடைத்த பெருங்கற்கால ஈமக் குறும் பேழை

கல்வெட்டு - காலாண்டிதழ் : 67 (சூலை 2005) விலை ரூ.10.00

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,** இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர்,
தொல்லியல் துறை.

தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஹால்ஸ் சாலை,
எழும்பூர், சென்னை-600 008.
20-07-2005

# பதிப்புரை

கல்வெட்டு காலாண்டு இதழ் 67 வெளிவரும் இக்காலாண்டில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் பல மகிழ்வான நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. இத்துறையின் வளத்தினையும், சிறப்பினையும், வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு இதன் ஆக்கபூர்வமான பணிகளுக்காகத் தமிழ்நாடு அரசு தாராளமாக நிதி ஒதுக்கீடுகள் செய்து ஆணைகள் வழங்கியுள்ளது. இத்துறையில் தொல்லியல் பயின்ற வேலையில்லாத மாணவர்கள் ஐவர் வேலை பெற்றுள்ளனர்.

இத்துறையின் அமைச்சர் பெருமகனார், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித்துறை அமைச்சர் திரு. சி. வி. சண்முகம் அவர்கள், இத்துறையின் சிறப்பான விழா நிகழ்ச்சிகளான அண்மைக்கால அகழாய்வுகள் குறித்த கண்காட்சியைத் திறந்து வைத்துக் கண்டு களித்தும், அழகன்குளம் அகழாய்வு நூலினை வெளியிட்டு விழாவினைச் சிறப்புச் செய்தும், துறையினரை மகிழ்வித்து பணிகளை ஊக்குவித்துள்ளார்கள்.

தமிழகக் கல்வெட்டுகளைப் படியெடுக்கும் முனைப்புத் திட்டத்தில் அறியப்பட்ட கோயில் கொடிமரம் பற்றிய கல்வெட்டு, அஞ்சினான் புகலிடக் கல்வெட்டுகள், கொங்கு சோழர், சோழனை எறிஞ்ச வீரபாண்டியன் கல்வெட்டுகள் கட்டுரைகளாகவும், நீர்வழக்காட்டுச் செய்தி, சிவலிங்கத்தில் உள்ள கல்வெட்டு, பாண மன்னன் பெயரில் விஜயாதித்த ஈஸ்வரம், அகத்துறைப் பாடல் கல்வெட்டு, முக்குறுணி அளவுக் கல்தொட்டி முதலியன பெட்டிச் செய்தி மற்றும் தொகுப்புச் செய்திகளாகவும் இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ளன. கிராமிய வழிபாடான நடுகல்லுக்கு ஆகம அடிப்படையில் கருவறையுடன் கோயில் கட்டி வழிபடப்படுவதை ஒரு கட்டுரை குறிப்பிடுகிறது. மலைகளில் அமையும் கோட்டை, தரங்கம்பாடி காசுகள், திணை-பெருந்திணை குறித்த கட்டுரைகளும் இவ்விதழைச் சிறப்புச் செய்கின்றன.

தமிழ், ஆங்கில நாளிதழ்கள் மட்டுமின்றி தெலுங்கு நாளேடும் வெளியிட்ட ஆண்டிப்பட்டி அகழாய்வில் கிடைத்த பெருங்கற்காலக் 'ஈமக்குறும்பேழை' இவ்விதழ் முகப்பு அட்டையை அணி செய்கிறது.

என்னுடன் கைகோர்த்து துறையின் ஆக்கப் பணிகளில் ஊக்கத்துடன் பணியாற்றி வளம் சேர்த்திடும் இத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரையும் பாராட்டி மகிழ்கின்றேன்.

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,**
பதிப்பாசிரியர்

# 1 திணை, பெருந்திணை - ஓர் ஆய்வு

**முனைவர் சொ. சாந்தலிங்கம்**
தொல்லியல் அலுவலர், மதுரை

தமிழ்க் கல்வெட்டுகளிலும் இலக்கியங்களிலும் திணை, பெருந்திணை என்னும் சொற்கள் பல இடங்களில் பல வரலாற்றுக் காலகட்டங்களில் பயின்று வருகின்றன. அவற்றின் சரியான பொருளை அறிவதில் ஆய்வாளர்களிடையே இன்னும் ஒத்தகருத்து எட்டப்படவில்லை. இச்சொற்கள் பற்றிய ஒரு மறுபார்வையாக இக்கட்டுரை அமைகிறது.

சங்க இலக்கியங்களில் திணை பற்றிய குறிப்புகள் ஒரு சில இடங்களில் காணப்படுகின்றன.

> 'தொல் திணை மூதூர்' (மலைபடுகடாம்:401)
> 'முன் திணை முதல்வர் போல் நின்று நீ
> கெடா நல்லிசை நிலை இ' (பதிற்றுப்பத்து-14:20-21)
> 'துளங்கு குடி விழுத்திணை திருத்தி'
> (பதிற்றுப்பத்து-31:13)
> 'ஆடு குடி மூத்த விழுத்திணைச் சிறந்த
> வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த' (புறம்-24)

ஆகியவற்றை எடுத்துக்காட்டுகளாகச் சுட்டலாம். 'தொல் திணை மூதூர்' என்னும் மலைபடுகடாம் தொடருக்கு பழையதாகிய உயர்ந்த ஒழுக்கத்தினை உடைய பழைய ஊர்கள் என்று பொருள் கூறுகிறார் நச்சினார்க்கினியர்.[1] 'முன் திணை முதல்வர் போல' என்னும் பதிற்றுப்பத்துத் தொடருக்கு உன் குலத்தில் முன் இருந்த முதல்வர் புகழை நீ நிலைபெறச் செய்வாய்' என்று கூறித் திணை எனில் குலம் எனப் பொருள் கூறுவார் உ.வே.சா. அவர்கள். அவரே விழுத்திணை என்பதற்கும் குடிகள் என்றே பொருள் தருவார்.[2] திணை என்பது பழந்தமிழில் குடும்பம், கணம், குடியிருப்பு எனப் பொருள் தரும் என்பார் கா.சிவத்தம்பி[3]. திணை என்னும் சொல்லுக்கு இடம், ஒழுக்கம், குடி, குலம், பூமி, பொருள் எனப்பல பொருள்களைத் தருகிறது தமிழ் மொழி அகராதி.[4] இவற்றின் மூலம் திணை என்னும் சொல் குடி, குலம், குடும்பம் ஆகியவற்றோடு தொடர்புடையதே என்று கருதுகிறார் மற்றொரு ஆய்வாளர்.[5]

கல்வெட்டுகளைப் பொறுத்தவரை பூலாங்குறிச்சி[6] கல்வெட்டில் தான் திணை பற்றிய முதல் குறிப்பைக் காண்கிறோம். நாற் பாற்றிணை, உலவியப் பெருந்திணை என்னும் சொற்கள் இக்கல் வெட்டில் இடம் பெற்றுள்ளன. இக்கல்வெட்டை ஆய்வு செய்த முனைவர். சுப்பராயலு நாற்பாற்திணை, என்பதை நான்கு வகை யான திணை அதிகாரிகள் என்றும் அவற்றில் ஒருவகை உலவியப் பெருந்திணை என்றும் குறிப்பிடுகிறார். மேலும் இவ்வதிகாரிகள் நிலவரிக் கணக்கர்களாக இருக்கலாம் என்றும் அவர் கருதுகிறார். உலவியப் பெருந்திணை என்னும் தொடரில் உள்ள உலவியன் என்பது அரசனின் சிறப்புப் பெயர் என்றும், அவனிடம் பணி செய்யும் பெருந்திணை அதிகாரி எனவும் பொருள் கொள்கிறார்.[7]

இரண்டாம் நந்திவர்ம பல்லவனின் 33-ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட (கி.பி.763) புல்லூர்ச் செப்பேட்டில்[8] கடங்காட்டுப் பெருந்திணை பங்கு ஒன்று, நாட்டியப் பெருந்திணை பங்கு ஒன்று என்னும் குறிப்புகள் உள்ளன. பிரமதேயமாகக் கொடுக்கப்பட்ட நிலங்களில் இரண்டு பெருந்திணை அதிகாரி களுக்கும் பங்குகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் கடங்காட்டுப் பெருந்திணை என்பது கடங்காடு என்னும் ஊரைச் சேர்ந்த பெருந் திணை எனக் கருதலாம். நாட்டியப் பெருந்திணை என்பதை நாட்டியம் அல்லது நடனத்தில் சிறந்தவன் என்று சொல்வதைக் காட்டிலும் நாட்டுப் பெருந்திணை என்பதன் தவறான சொல் வடிவமாகக் கருதலாம். இவ்வாறு கொண்டால் ஊர் மற்றும் நாடு அளவில் பெருந்திணை அதிகாரிகள் செயல்பட்டுள்ளனர் எனக் கொள்ள ஏதுவாகும். இதுமட்டுமின்றி பிரமதேயங்களிலும் அரசு அதிகாரிகள் உடனிருந்து கண்காணித்தனர் என்று கொள்வதற்கும் இச்செப்பேட்டுக் குறிப்பு வழி வகுக்கிறது.

இதற்கடுத்து பாண்டிய நாட்டு ஆனைமலைக் கல்வெட்டில்[9] புரவுவரித் திணைக்களத்தார் என்னும் நிலவரி அதிகாரிகள் குழு ஒன்று குறிக்கப்படுகிறது. இவர்கள் நிலவரி வசூலிக்கும் குழுவினர் என்பது தெளிவு. சமணர் சின்னங்களைக் காக்கின்ற பொறுப்பையும் இங்கு இக்குழுவினர் ஏற்றுள்ளனர். சோழநாட்டுத் திருவிடைமருதூர்க் கல்வெட்டு ஒன்றில்[10] (கி.பி.945) 'திருவிடை மருதில் இருமுடி சோழப் பல்லவரையர்க்காக ஸ்ரீகாரியம் ஆராய் கின்ற திருபாதாட் பெருந்திணை' என்ற குறிப்பு இடம் பெறுகிறது. கி.பி.926-ஆம் ஆண்டைச் சேர்ந்த அந்தவநல்லூர்க் கல்வெட்டு ஒன்று[11] செம்பியன் இருக்குவேளானுக்குத் திருமுகம் வர இவர் தன்

கன்மி உறத்தூர்த் திணையை இப்பரிசு செய்து கொடுக்க என்று ஏவ இவனும் இப்பரிசு செய்து குடுத்தான்' என்று கூறுகிறது. இதன்மூலம் இங்கு 'திணை' என்னும் அதிகாரி ஒரு தனிச்செயலர் (நம் கன்மி) தகுதியில் இருந்துள்ளமை தெரியவருகிறது. ராட்டிர கூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனின் போனூர்க் கல்வெட்டு ஒன்று (கி.பி.10-ஆம் நூற்றாண்டு) 'கொற்றபிரான் ஆகிய கண்டர பீம அருகூர் நாட்டுப் பெருத்திணை' என்பவனுக்கு அவ்வூர்ச் சபையார் நிலம் விற்பனை செய்ததைத் தெரிவிக்கிறது.[12] இவன் அருகுளான் நம்பி செட்டிமகன் என்றும் குறிப்பிடப்படுகிறான். முதலாம் இராசேந்திர சோழன் காலத்திய மேற்பாடிக் கல்வெட்டு ஒன்று 'நம்பிதிணையான்' ஒருவன் விளக்கு எரிப்பதற்குப் புணையாக நின்றான் என்று தெரிவிக்கிறது.[13]

திருச்சி மாவட்டம் மேலப்பழுவூர் அகத்தீசுவரர் கோயிலில் உள்ள நிலக்கொடை ஆவணம் ஒன்றில் கையொப்பம் இட்டுள்ளவர்களில் சிலர் திணை, பெருந்திணை என்னும் தகுதியைப் பெற்றுள்ளனர்.[14] சாத்தனூருடைய திணையான் மாயிலாட்டி மேல்மருதத்தூருடைய திணையான் குடிதாங்கி, கூற்றூருடைய இரணமுகநாமப் பெருந்திணை, கூற்றூருடைய மறவகோன் பெருந்திணை, திம்மியுடைய சுந்தர சோழப் பெருந்திணை என ஐந்து பேர் குறிப்பிடப்படுகின்றனர். கி.பி.8–ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் காணப்படுகிறது. இவன் ஒரு மடையைச் செய்துள்ளான்.[15] இருவப்பபுரம் கல்வெட்டு ஒன்று கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் 'மூங்குடி நாட்டு மாறமங்கலத்து திணைகள் பேரால் மிழலூர் அப்பனுழந் இடுவித்த செக்கு[16] என்னும் ஒரு குறிப்பைத் தருகிறது. பாண்டிய நாட்டில் வெண்புரையில் முதல் இராசராசன் கல்வெட்டு ஒன்று வெண்புரை திணை வழுவிலி என்னும் ஒரு அதிகாரியைச் குறிப்பிடுகிறது.[17]

வடஆர்க்காடு மாவட்டம் கொடுங்கோலூர்க் கல்வெட்டுகள் இவ்வூரில் திணை என்னும் முன்ஒட்டுப் பெயர் பெற்ற மூவர் வெவ்வேறு ஆண்டுகளில் இருந்தமையைக் குறிப்பிடுகின்றன.

1) இவ்வூர் திணையான் அனந்தன் பெற்றான்[18] (கி.பி. 1196)

2) இவ்வூர் திணையான் இராமதேவன்[19] (கி.பி. 1199)

3) இவ்வூர் திணையான் குருமகன் குப்பன்[20] (கி.பி. 1233)

இம்மூவரும் கொடுங்கோளூரைச் சேர்ந்தவர்களா? அல்லது வெளியூர்களிலிருந்து இங்கு பணியமர்த்தப்பட்டவர்களா என்ற விபரம் எதுவும் கல்வெட்டுகளிலிருந்து பெறப்படவில்லை.

மேற்கண்ட கல்வெட்டுகளிலிருந்து திணை, பெருந்திணை என்பவர்கள் கணக்கர் என்னும் அதிகாரிகளாகக் கொள்ளத் தக்கவர்களா அல்லது அதற்கு அப்பாலும் ஏதேனும் சிறப்பான பதவிகள், தகுதிகள் கொண்டவர்களா என்பது ஆய்வுக்குரியதாக உள்ளது. செம்பியன் இருக்குவேள் என்னும் சிற்றரசனுக்குக் கன்மியாக (அணுக்க அதிகாரியாக)வும் ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற பணிகளைச் செய்யத் தக்கவர்களாகவும், ஊர் அளவிலும், நாட்டளவிலும் பணி செய்யத் தக்கவர்களாகவும் இருப்பதால் இவர்களைச் சாதாரணமாக வரிக்கணக்கர் மட்டுமே எனக் கொள்வதைவிட அதற்கும் மேலான முக்கியத்துவம் பெற்ற அதிகாரிகளாக இருக்கவேண்டும் எனக் கருதலாம்.

மேலும் திணை, பெருந்திணை என்பதை தகுதி அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட உயர்பதவிகள் (Heirarchy) எனக் கருதவும் வாய்ப்புள்ளது. திணை என்பது ஊரளவிலும், பெருந்திணை என்பது நாடளவிலும் செயல்படுபவர்கள் எனலாம். ஏனாதி, காவிதி என்பது போல் திணை, பெருந்திணை என்பவையும் ஒருவகையில் பட்டங்கள் எனவும் கருதலாம். இப்பணிகளுக்கு இவர்களைத் தேர்வு செய்யும்போது வழிவழியாக வந்த இவர்களின் குடிப்பிறப்பு, குலமரபு அல்லது செல்வ வளம் ஒரு தகுதியாகக் கொள்ளப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

அடிக்குறிப்புகள்

1. ஆர். பூங்குன்றன், தொல்குடி, வேளிர் அரசு, புதுமலர்ப் பதிப்பகம்– கோவை - 2001. பக்.126.

2. பதிற்றுப்பத்து உ.வே.சா. உரை.

3. கா. சிவத்தம்பி, திணைக்கோட்பாட்டின் சமூக அடிப்படைகள் ஆராய்ச்சி இதழ் 1972.

4. நா. கதிரைவேற்பிள்ளை, தமிழ்மொழி அகராதி, 6ம் பதிப்பு 1994. பக்.769.

5. நாக. கணேசன், கல்வெட்டுகளில் பெருந்திணை, 2002.

6. பூலாங்குறிச்சி கல்வெட்டு தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறை சென்னை-1980.

7 Dr. Y. Subbarayalu, Kaveri - P.4
8. புல்லூர்ச் செப்பேடு, பல்லவர் செப்பேடுகள் முப்பது. வரி 98-99
9. தெ.இ.க.தொ. 14:81.
10. தெ.இ.க.தொ. 23:195
11. தெ.இ.க.தொ. 8:668
12. Rastrakuta Inscriptions in the Tamil Country S. Swaminathan No. 96 (ARE 1942/127).
13, தெ.இ.க.தொகுதி 3 பகுதி 1 எண் 18
14. ஆவணம் இதழ் 3 பக்கம் 8-10.
15. மேலது பக்கம் 12.
16. மேலது பக்கம் 20.
17. வரலாற்றுக் கலம்பகம் பக்கம் 26-27.
18. இ.க. ஆண்டறிக்கை 19241:15.
19. மேலது 123.
20. மேலது 122, 126.

## பிட்டுச் சொக்கநாதர் கோயில்

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டியில், மதுரை-காரியாபட்டி சாலையில் ஈசுவரன் கோயிலொன்றுள்ளது. இக்கோயில் கலியுகம் 4778க்கு இணையான சக ஆண்டு 1599இல் சங்கரயோகி என்பவரால் சிவபிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இக்கோயில் திருப்பணி மதுரைப் பூவனாத பண்டாரங் குமாரர் பட்டுச் சொக்கப் பண்டாரம் அவர்களால் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலுக்குச் சிவலோக நாயகி அம்மனுடனுறை பிட்டுச் சொக்கனாத சுவாமி கோயில் என்ற பெயர் 17-ஆம் நூற்றாண்டளவில் வழங்கி வந்துள்ளது.

இப்புதிய கல்வெட்டைப் படியெடுத்தோர்: **பொ. இராசேந்திரன், முனைவர் வெ. வேதாசலம், முனைவர் செ. சாந்தலிங்கம்,** மதுரை

# 2 கொடிமரத்தை லிங்கமாகக் கூறும் கல்வெட்டு

**முனைவர் மா. செந்தில்செல்வக்குமரன்**
தொல்லியல் அலுவலர்

உபரிசரவசு என்பவன் சேதி நாட்டு அரசன். அம்மன்னன் இந்திரனை எண்ணித் தவம் செய்து ஆகாயத்தில் சஞ்சரிக்க விமானம் பெற்றவன். (அபிதான சிந்தாமணி-ப.242) இம் மன்னனுக்கு முதன்முதலாக கொடிக்கம்பம் இந்திரனால் வழங்கப் பட்டது. இக்கம்பத்தின் பொருட்டு உபரிசரவசு மார்கழி மாதம் சுக்கல பட்சத்தில் இந்திரப் பூசையாக வழிபாடு நடத்தினான். (அபிதான சிந்தாமணி ப.508) இவ்வகை புராணக் கதைகள் வழியாக கோயில்களில் கொடிக்கம்பம் இடம்பெறத் தொடங்கிச் சிறப்புப் பெற்றது.

பொதுவாக பெருந்தெய்வக் கோயில்களில் சன்னதிக்கு எதிரில் நிரந்தரமாகக் கொடிமரம் இடம்பெற்று இருக்கும். கொடி மரத்தின் உச்சியில் அந்தந்தக் கோயிலுக்குரிய இறைவனின் திருவுருவமோ அல்லது வாகனமோ இடம்பெற்று இருக்கும். பெருந்திருவிழாக்கள் கொடியேற்று திருவிழாவுடன்தான் தொடங்கு கின்றன. சில பெருங்கோயில்களில் நிரந்தரக் கொடி மரத்தோடு எட்டுத் திசைகளிலும் உயரம் குறைந்த கொடிமரங்களைத் திருவிழாவின் போது தற்காலிகமாக நட்டு வைப்பர். இவை எண்திசைக் காவலர்களுக்காக வைக்கப்படும் கொடிமரங்கள் ஆகும்.

சிறுதெய்வ கோயில்களில் திருவிழாச் சமயத்தில் மட்டும் கொடிமரத்தை நட்டு, கொடி ஏற்றுவர். சில கிராமங்களில் விழாவிற்கான கொடி ஏற்றிய பின்னர் அவ்வூரைச் சேர்ந்த மக்கள் வெளியூருக்கு செல்லக்கூடாது எனக் கட்டுப்பாட்டை விதிக்கும் வழக்கம் உள்ளது. இதனைக் கொடித்தடை என்று கூறுவர்.

பெருங்கோயிலில் உள்ள கொடிமரம் பித்தளை அல்லது செம்பு தகட்டால் மூடப்பட்டு இருக்கும். மரம் கெட்டுவிடாமல் இருக்கவும், அழகுக்காகவும் இவ்வாறு செய்யப்படுகிறது. அப்படியும் மரம் கெட்டு போய்விட்டால், புதிய மரத்தை நல்ல நாள் பார்த்து நட்டு குடமுழுக்கு நடத்துவர்.

இவ்வாறு பழைய மரத்தை எடுத்து, புதிய மரம் நட்ட செய்தியைத் திருப்புடைமருதூர் புட்டார்ச்சுனேஸ்வரர் கோயில் கல்வெட்டு தெரிவிக்கிறது. இக்கல்வெட்டு கொடி மரத்தை சிவலிங்கமாகக் காட்டுவதைக் காணமுடிகிறது. சிவலிங்கத்தை பிரம்மன், விஷ்ணு, ருத்ர கடவுளர்கள் இணைந்த உருவமாக படிமக் கலை நூல்கள் விவரிக்கின்றன. சிவலிங்கத்தின் அடியில் உள்ள பகுதி பிரம்மபாகம் என்றும், நடுவில் உள்ள ஆவுடையார் என்று அழைக்கப்படும் பகுதி விஷ்ணு பாகமாகவும், மேலே தெரிகின்ற வழிபாட்டிற்குரிய பகுதி ருத்ர பாகமாகவும் குறிப்பிடப்படுகின்றன. திருப்புடைமருதூர் கல்வெட்டு கொடிமரத்தின் அடிப்பகுதியை பிரம்ம பாகமாகவும், பீடமாக உள்ள பகுதியை விஷ்ணு பாகமாகவும், மேலே உள்ள கம்பத்தை ருத்ர பாகமாகவும் குறிப்பிடுகிறது. மேலும் ஒவ்வொரு பாகத்தின் அளவையும் அக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

ஜீரணமான பழைய கம்பத்தில் பிரம்ம பாகம் $1\frac{3}{4}$ முழமும், விஷ்ணு பாகம் $1\frac{3}{4}$ முழமும், ருத்ரபாகம் $16\frac{1}{8}$ முழமும் ஆக மொத்தம் $19\frac{1}{8}$ முழம் கொண்டதாக இருந்தது. அதனை நீக்கிவிட்டு பிரம்ம பாகம் $2\frac{3}{8}$ முழமும், விஷ்ணு பாகம் $2\frac{3}{8}$ முழமும், ருத்ர பாகம் $16\frac{7}{8}$ முழமும் உள்ள $21\frac{5}{8}$ முழம் கொண்ட புதிய கொடி மரம் பிரதிஷ்டை செய்து குடமுழுக்கு நடைபெற்றதாக அக்கல்வெட்டு தெரிவிக்கின்றது. கி.பி.1899-ல் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டு கொடிமரம் பற்றிய புதிய சிந்தனையைத் தருகின்றது.

### திருப்புடைமருதூர் கொடிமர மண்டப கல்வெட்டு

1. சிவமயம் சூஎ௱ச ஞூ ஜெனவரி
2. ஆதிவாரம் உரோகினி நஷத்திரம்
3. கும்ப லக்கனமுங் கூடிய சுபதினத்தில்
4. புடார்ஜுன ஸ்தலமென்ற
5. இத்திருப்புடைமருதூரில்
6. ஸ்ரீகோமதியம்மா ஸமேத
7. ஸ்ரீபுடார்ச்சுனேஸ்வரர் சன்னிதானத்தில்
8. பிரம்ம பாகம் முளம் களு
9. விஷ்ணு பாகம் முளம் களு
10. ருத்திரபாகம் முளம் ௰கூவு

11. முந்திய துஜஸ் கம்பம் ஆக சிற்ப முளம் ௰௪இவூ உள்ள
12. ஜீரணப்பட்டிருந்ததை
13. உத்தியாபனஞ் செய்து
14. பிரம்ம பாகம் முளம் உவூ
15. விஷ்ணு பாகம் முளம் உவூ
16. ருத்திர பாகம் முளம் ௰கூஞூவூ
17. ஆகச் சிற்ப முளம் உ௰கஇவூ
18. வேறு புதிதாய்
19. துஜஸ்தம்பம் நிர்
20. மானஞ் செய்து
21. பிரதிஷ்டித்து
22. கும்பாபிஷேகம்
23. சிறப்பாக நடந்தருளப் பெற்றது.

## சுலோச்சனா முதலியார் பாலம்

திருநெல்வேலியையும் கொக்கிரக் குளத்தையும் இணைக்கும் வகையில், கி.பி. 1843இல், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலத்தில் சிராஸ்தார் பதவியிலிருந்த சுலோச்சனா முதலியாரால் பாலம் கட்டப்பட்டது. தேம்ஸ் நதியின் மேல் அமைக்கப்பட்டுள்ள "வாட்டர்லூ" என்ற பாலத்தைப் போன்று 11 வளைவுகளுடன் கட்டப்பட்டுள்ள இப்பாலத்தினை வடிவமைத்தவர் ஆங்கிலேயப் பொறியாளர் கேப்டன் ஃபேபர் (Cap: Faber) ஆவார். லெஃப்டினட் ஹார்ஸ்லே (Lt. Horslay) அவர்களின் மேற்பார்வையில் இப்பாலம் கட்டி முடிக்கப்பட்டது. இன்றும் இப்பாலத்திற்குச் சுலோச்சனா முதலியார் பாலம் என்ற பெயர் வழங்கி வருகிறது.

தகவல்: **முனைவர் மா. செந்தில்செல்வகுமரன்**

தொல்லியல் அலுவலர், திருநெல்வேலி

# 3 மூலகாங்குப்பம் துருகமலைக் கோட்டை

**து. துளசிராமன்**
காப்பாட்சியர், பூண்டி

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டத்தில் குடியாத்தத்திற்கு செல்லும் வழியில் உள்ள கீழ்வழித்துணை நாயனார் குப்பத்திற்கு வடக்கில் ஆலங்கனேரி, மேல் மாயனூர் ஆகிய ஊர்களைக் கடந்து சென்றால் மூலகாங்குப்பம் என்னும் ஊரை அடையலாம். இவ்வூருக்கு வடமேற்கில் உள்ள 'துருகமலை' மீது ஒரு கோட்டை உள்ளது.* உருதுமொழியில் '**துருகம்**' என்றால் கோட்டை என்று பொருள். எனவே கோட்டை உள்ள இம்மலைக்கு 'துருக மலை' என்று பெயர் ஏற்பட்டது. இது கீழ்மலை, பாறை மலை என இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

## மலைக்கோட்டை

கீழ்மலை மீது உள்ள மிகப்பரந்த பகுதியை வளைத்து கருங்கற்களாலான மதிற்சுவரைக் கட்டியுள்ளனர். இந்த மதில் சுவரின் இரு வெளிப்புறங்களும் கருங்கற்களால் கட்டப்பட்டு, இடைப்பகுதி செங்கல் மற்றும் சுண்ணாம்பு கொண்டு வலிமையாகக் கெட்டிப்படுத்தப்பட்டுள்ளது. இச்சுவர் 132 செ.மீ. அகலத்தில் கீழ்மலை முழுவதையும் சுற்றி வளைத்துள்ளது. இதில் வீரர்கள் மறைந்திருந்து எதிரிகளைத் தாக்குவதற்கு வசதியாக ஆங்காங்கு முனைப்பான முகப்புடைய வட்ட வடிவ கொத்தள மேடைகள் (Bastions) அமைக்கப்பட்டுள்ளன. இக்கோட்டையின் பெரும்பகுதி தற்போது சிதைந்து போயுள்ளது.

## நுழைவாயில்

மதில் சுவரின் இடையில் தெற்குப்புறத்தில், ஒரு பெரிய நுழைவாயில் கட்டப்பட்டுள்ளது. கிழக்கு மேற்காக 13 மீட்டர் நீளமும், வடக்கு தெற்காக 9 மீட்டர் அகலமும், கொண்டுள்ள இதன் நடுவில் 3 மீட்டர் அகலத்திற்கு கோட்டைக்குள் செல்வதற்கான வாயில் உள்ளது. இதன் இரு புறமும் 12 கருங்கல்

---

* குடியாத்தம் ஆசிரியர் திரு. எம்.பி. கணேசன் அவர்கள் இக்கோட்டையைப் பற்றி தகவல் அளித்தார். திரு. ப, வெங்கடேசன், தமிழாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, காவேரிப்பாக்கம் அவர்கள் இக்கோட்டை ஆய்வில் கலந்துக்கொண்டார். அவர்களுக்கு நன்றி.

தூண்கள் தாங்கும் திண்ணைகளுடன் கூடிய மண்டபங்கள் கட்டப் பட்டுள்ளன. இவற்றில்தான் கோட்டை நுழைவாயிலைக் காவல் காக்கும் வீரர்கள் தங்கி இருந்தனர். கருங்கற்களால் கட்டப் பட்டுள்ள இந்த நுழைவாயில் சுவரின் அகலம் 48 செ.மீ. ஆகும். இதன் கூரை செங்கல் மற்றும் சுண்ணாம்பு கலந்த ஜல்லிக் கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. இதுவும் பெருமளவில் சிதைந் துள்ளது.

### கோயிலும் கட்டடங்களும்

கோட்டைக்குள் அதிகாரிகளும் வீரர்களும் தங்குவதற்குரிய கட்டடங்களின் அடிப்பகுதிகள் ஆங்காங்கு காணப்படுகின்றன. செங்கற்களால் கட்டப்பட்ட ஒரு கோயிலும் இங்குள்ளது. இதனுள் சிலை ஏதுமில்லை. சிதைந்து போன சிவன் கோயில் ஒன்று இங்கு இருந்துள்ளது. கோயில் இருந்ததற்கான கட்டட அமைப்பும், பாதியாக உடைந்துபோன நந்தியின் சிலையும் இப்பொழுதுள்ளன. இயற்கையாக அமைந்த இரு குகைத்தளங்களும் இங்குள்ளன. இவற்றின் பாறைத்தரையில் தாயம், ஆடுபுலி ஆட்டம் ஆகியவை விளையாடுவதற்கான படங்கள் கோடுகளாக வெட்டப்பட்டுள்ளன. இவையன்றி அறிந்துகொள்ள முடியாத விளையாட்டுகளின் கோடுகளும் இங்கு வெட்டப்பட்டுள்ளன. மேலும் சிங்கம், புலி போன்ற விலங்குகளின் அழகிய கோட்டுருவங்களும் இங்குள்ள பாறையில் வெட்டப்பட்டுள்ளன.

### நீர்ச்சுனையும் கல்வெட்டும்

கீழ்மலையிலிருந்து பாறை மலைக்கு செல்லும் வழியில் இயற்கையாக அமைந்த ஒரு நீர்ச்சுனை உள்ளது. இதன் தென் புறத்தில் உயரமான கருங்கல் சுவரை எழுப்பி, சுனையில் அதிக அளவில் நீர் தேங்குமாறு செய்துள்ளனர். இதனுள் செல்வதற்கு கருங்கல் படிகளும் அமைத்துள்ளனர். இச்சுனையிலிருந்து மிகுதி யாக வெளிப்படும் நீர் 'கூட்டுக்கானாறு' என்னும் பெயரில் ஒரு கால்வாயாக மூலகாங்குப்பம் கிராமத்தை ஒட்டிப்பாய்கிறது. சுனையை ஒட்டியுள்ள பாறையில் "கூப சுநய்" என்று கி.பி.14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்தமைதியுடன் கூடிய ஒரு கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டு சுனையின் பழமையைச் சுட்டுவதாகும்.

### காவல்கோபுரம்

நாற்புறமிருந்தும் வரும் எதிரிப் படைகளின் நடமாட்டத்தை உளவு பார்க்க வசதியாக, இம்மலையின் மிக உயரமான பாறை மீது காவல்கோபுரம் (Watch Tower) அமைக்கப்பட்டுள்ளது.

இதற்குச் செல்லக் கீழ்மலையிலிருந்து பாறையில் 102 படிக் கட்டுகள் வெட்டப்பட்டுள்ளன. மலைமீது சிதைந்த ஒரு சிறிய சிவன் கோயிலும்12 மீட்டர் நீளமும் 6 மீட்டர் அகலமும் கொண்ட இரு கட்டடங்களின் அடிப்பகுதிகளும், $1\frac{1}{2}$ x $1\frac{1}{2}$ மீட்டர் அளவில் சதுரமான சுரங்கப்பாதுகாப்பு அறையும், இயற்கையாக அமைந்த இரண்டு நீர்ச் சுனைகளும் உள்ளன.

பானை ஓடுகளும், கூரை ஓடுகளும்

இக்கோட்டைப் பகுதியில் மேற்கொண்ட மேற்பரப்பாய்வில் சொரசொரப்பான் சிவப்பு வண்ண பானை ஓடுகளும், கருப்பு வண்ண ஓடுகளும் (Coarse Red ware, Coarse Block ware), சுடுமண் கெண்டியின் மூக்குப் பகுதிகளும் (Terracotta spouted Knobs), மூடிகளும் (Lids), வட்டுகளும் (Hip-shops), தட்டையான "L" வடிவ கூரை ஓடுகளும் ("L" shaped roofing tiles) பெருமளவில் கிடைத்தன. இது போன்ற சுடுமண் கெண்டியின் மூக்குப் பகுதிகளும், தட்டையான கூரை ஓடுகளும் திருவண்ணா மலை மாவட்டம் படவேடு கோட்டைப் பகுதியிலும், அகழ்வில் மிக அதிக அளவில் கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கோட்டை அமைத்ததின் நோக்கமும் காலமும்

இக்கோட்டை தற்போது ஆந்திர மாதிலம் சித்தூர் மாவட்ட எல்லையை ஒட்டியுள்ளது. கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இப்பகுதி படவேட்டைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த சம்புவ ராயர்கள் வசம் இருந்தது. இக்காலக்கட்டத்தில் வடஇந்தியாவி லிருந்து இசுலாமியர்கள் அடிக்கடி தமிழகத்தின் மீது படையெடுத்து வந்தனர். இப்படையெடுப்புகளை எதிர்கொள்ளவும், தடுத்து நிறுத்தவும் சம்புவராயர்கள் வேலூர், பாலேலேகுப்பம், மகிமண்டலம், கொடாம்பூர், கம்மவான்பேட்டை போன்ற இடங்களில் மலைக் கோட்டைகளை அமைத்திருந்தனர். அத்தகைய மலைக்கோட்டை களுள் மூலகாங்குப்பம் துருகமலைக் கோட்டையும் ஒன்றாக இருந் துள்ளது. பின்னர் ஆர்க்காட்டு நவாபுகள் காலத்திலும் இது தொடர்ந்து பயன்பாட்டில் இருந்தது.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் எழுத்தமைதியுடன் கூடிய கல்வெட்டு ஒன்று இங்கு காணப்படுவதையும். சோழர் காலத்தில் பெருமளவில் வழக்கிலிருந்த தட்டையான "L" வடிவ கூரை ஓடுகள் இங்கு அதிக அளவில் கிடைப்பதையும் கொண்டு இம்மலைக் கோட்டை கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சம்புவராய ரால் கட்டப்பட்டதெனக் கூறலாம்.

# 4 உக்கல் கல்வெட்டுச் செய்திகள்

இரா. செல்வராசு
தொல்லியல் அலுவலர், சிதம்பரம்

உக்கல், திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டத்தில், வந்தவாசி - காஞ்சிபுரம் சாலையில், வந்தவாசியிலிருந்து 23கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

**கோயில்கள்**

உக்கல்லில் இரண்டு கோயில்கள் உள்ளன. 1. புவன மாணிக்க விஷ்ணு கிரஹம் 2. வைத்தியநாத சுவாமி கோயில் என்ற சிவன் கோயில். இங்கு கிடைக்கும் கல்வெட்டுக்களிலிருந்து மேலும் ஒரு பிடாரி கோயில் இருந்ததை அறிய முடிகிறது. இங்கு பிடாரி கோயில் இருந்ததற்கான சான்றுகளாக சிற்பங்கள் கிடைக்கின்றன. விஷ்ணு மற்றும் சிவன் கோயில்கள் தற்காலக் கட்டிட அமைப்பைக் கொண்டுள்ளன. கல்வெட்டில் விஷ்ணு கோயில் ''புவன மாணிக்க விஷ்ணு கிருஹம்'' என்று குறிப்பிடப்படுகிறது. புவன மாணிக்கம் என்ற பெயர் பல்லவ மன்னனான நிருபதுங்கனின் மனைவியின் பெயராகும்.

**கல்வெட்டுகளில் ஊர்ப் பெயர்**

உக்கலில் உள்ள இரண்டு கோயில்களிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.* இவை பல்லவர், சோழர், இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணன், தெலுங்குச் சோழர், பிற்காலப் பாண்டியர் ஆகியோர் காலத்தைச் சேர்ந்தவையாகும்.

பல்லவ மன்னனான கம்பவர்மனின் (கி பி.869-901) காலத்தில் இவ்வூருக்கு ''உட்கல்'' என்ற பெயர் வழங்கிவந்தமையை இவனுடைய 10-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுப் புலப்படுத்துகிறது. முதலாம் ஆதித்த சோழனின் காலத்தில் ''சிவச் சூளாமணிச் சதுர்வேதி மங்கலமான அபராஜித சதுர்வேதி மங்கலம்'' என்ற பெயர் வழக்கிலிருந்துள்ளது. சிவச் சூளாமணி என்ற சிறப்புப் பெயர் பல்லவ மன்னனான இராஜசிம்ம பல்லவனுடைய சிறப்புப் பெயர்களில் ஒன்றாகும். எனவே, மேற்சுட்டிய இரு பெயர்களும் பல்லவர் காலத்திலிருந்தே வழக்கிலிருந்து வருவதாகக் கருதலாம்.

---

* உக்கலில் 1883. 1902, 1940-ஆம் ஆண்டுகளில் 30 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன.

அபராஜித மன்னன் கம்பவர்மனின் மகன் என்பதைத் திருத்தணி வேலஞ்சேரி செப்பேட்டின் வாயிலாக அறிய முடிகிறது. ஆதித்த சோழன் தொண்டை நாட்டை வென்றதைத் திருவாலங்காட்டுச் செப்பேட்டின் வாயிலாகவும், தில்லைஸ்தானம் கல்வெட்டின் வாயிலாகவும் உறுதிப்படுத்த முடிகிறது. திருப்புறம்பியப் போரில் அபராஜித பல்லவனுக்கு உறுதுணையாக இருந்து வெற்றிக் கனியைப் பறிப்பதற்கு உதவிய ஆதித்தனுக்கு சோழ மண்டலத்தை முழுமையாக ஆட்சி செய்ய விட்டுக்கொடுத்தவன் அபராஜிதன். எனவே முதலாம் ஆதித்தசோழனின் 23-வது ஆட்சியாண்டிலும் உக்கல் அபராஜித சதுர்வேதி மங்கலம் என்ற பெயரிலேயே தொடர்ந்தழைக்கப்பட்டு வந்துள்ளதைக் கல்வெட்டுகள் காட்டுகின்றன.

அடுத்து வந்த பராந்தக சோழன் காலத்தில் உக்கலுக்குச் சிவ சூளாமணி என்ற பெயர் தொடர்ந்திருந்துள்ளது. ஆனால் அபராஜித சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் வழக்கிழந்து, பராந்தகனின் சிறப்புப்பெயரின் அடிப்படையில் ஸ்ரீ விக்கிரமாபரண சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் வழக்கிற்கு வந்துள்ளது.

**பிற செய்திகள்**

உக்கல், கல்வெட்டுகளில் தனியூராக இராசராச சோழன் காலம் முதல் இருந்துள்ளது. சோழர் காலத்தில் தனியூர் என்பது தன்னாட்சி உடைய ஊராகும். இராசராசனின் பணி மகன் சோழ மண்டலத்து ஆவூர்க் கூற்றத்து ஆவூரைச் சேர்ந்த கண்ணன் ஆரூரன் உக்கல் பெருவழியில் கிணறு அமைத்து நீர்த் தொட்டியும் தண்ணீர்ப் பந்தலும் அமைத்துள்ளான்.

முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் உக்கல் ஏரி தூறு வாரப்பட்டுக் கரைகள் உயர்த்தப்பட்டுள்ளன. தூறுவாருதற்காக ஓடங்கள் (படகுகள்) கொடை கொடுக்கப்பட்டுள்ள செய்தியைக் கல்வெட்டு காட்டுகிறது. ஏரியைப் பராமரிக்க ஏரி வாரியம் ஒன்றும் செயல்பட்டிருக்கிறது.

உக்கலைச் சேர்ந்த குமாரகாலன் வாசுதேவனான அதிசய சோழன், கல்லால் கோயில் எடுத்ததை மற்றொரு கல்வெட்டு குறிப்பிடுகிறது.

தெலுங்குச் சோழன் கண்டகோபாலன் காலத்தில் நிலம் வாங்கிய செய்தி சொல்லப்படும் போது நிலவிலை, 230 'கண்ட கோபாலன் மாடை' என்ற காசிற்கு இணையான 1725 வராகன் பணம் என்று சொல்லப்பட்டுள்ளது.

# 5 நடுகல்லுக்குக் கோயில்

**தீ. சுப்பிரமணியன்**
தொல்லியல் அலுவலர், தஞ்சாவூர்

தமிழகத்தில் மற்ற மாவட்டங்களில் கிடைப்பதைவிட தருமபுரி மாவட்டத்தில் அதிக அளவில் நடுகற்கள் கிடைத்துள்ளன. இந்நடுகற்கள் தனிக்கல்லாக மட்டுமின்றி இரண்டு பக்கங்களிலும் இரண்டு பலகைக் கற்களை நிறுத்தி மேலே ஒரு பலகைக் கல்லை மூடுகல்லாக வைத்து சிறிய கற்கோயில் அமைப்பிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

தருமபுரி மாவட்டம், கல்லாவியிலுள்ள நடுகல்லுக்கு வைதீக கடவுள்களுக்கு எடுக்கப்படுகின்ற கோயில்களைப் போன்று கோயில் எடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இக்கோயில் சுமார் 300 ஆண்டு களுக்கு முன்னர் கட்டப்பட்டு தற்போது புதுப்பிக்கப்பட்டுள்ளது. இக் கோயிலில் கருவறை, அர்த்தமண்டபம், முகமண்டபம், மகாமண்டபம், திருச்சுற்று ஆகியவை உள்ளன. இவற்றுடன் சில நடுகற்களே பரிவார ஆலயங்களாகவும் கட்டப்பட்டுள்ளன.

கருவறை சதுரவடிவில் அமைந்துள்ளது. கல்லால் கட்டப்பட்டுள்ள கருவறையின் மேற்குப் பகுதியில் அபிடேகநீர்வர சிறிய கோமுகம் உள்ளது. கருவறையிலுள்ள வீரனின் இரண்டு கரங்களில் கத்தியும், கேடயமும் காணப்படுகின்றன. இச்சிற்பத்தின் உருவ அமைதியைக் கொண்டு இது கி.பி. 13,14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததெனக் கூறலாம். முகமண்டபத்திலும், மகா மண்டபத்திலும் கல்தூண்கள் நிறுத்தப்பட்டு இடைப்பட்ட பகுதியில் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இரண்டு மண்டபங்களும் பிற்காலத்தில் கட்டப்பட்டவை. கருவறையின் மேல் உள்ள விமானம் மூன்று தளங்களுடன் காணப்படுகின்றது. முன்னர் ஏகதளமாக இருந்தது. பின்னர் மாற்றி மூன்று தளமாக உயர்த்தி புதுப்பித்துக் கட்டப்பட்டுள்ளது. விமானத்தில் தெய்வ உருவங் களுக்குப் பதிலாக கந்தர்வ உருவங்கள் காட்டப்பட்டுள்ளன. தேவ கோட்டங்கள் காட்டப்படவில்லை.

கோயிலின் முன்பகுதியில் திருச்சுற்றினை ஒட்டி சுடுமண் குதிரை களும், யானைகளும், காவலர்களும் காட்டப்பட்டுள்ளனர். இந்த உருவங்கள் தனிப் பீடம் அமைத்து அதன்மேல் வைக்கப்பட்டுள்ளன.

திருச்சுற்றின் உட்பகுதியில் முகமண்டபத்தின் அருகில் பரிவார ஆலயங்களைப் போன்று முனியப்பன் கோயில் கட்டப்பட்டுள்ளது. இந்த ஆலயத்தில் இரண்டு நடுகற்கள் வைக்கப்பட்டுள்ளன. கிழக்கு நோக்கி ஒன்றும், வடக்கு நோக்கி ஒன்றும், வைக்கப்பட்டுள்ளன. ஒன்றில் வீரன் நின்ற நிலையில் கைகளில் கேடயம், கத்தியுடன் காட்டப்பட்டுள்ளான். வீரனின் அருகில் குதிரை ஒன்று உள்ளது. இரண்டாவது நடுகல்லில் புலியோடு சண்டை செய்யும் வீரனின் உருவம் வடிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ்ப்பகுதியில் நின்றநிலையில் பெண்ணின் உருவம் ஒன்று உள்ளது. பெண்ணின் வலது கை உயர்த்திக் காட்டியவாறு காணப்படுகின்றது. இது சதிக் கல்லைப் போன்றுள்ளது. இப்பகுதி மக்கள் இதனைத் தீப்பாய்ந்த அம்மன் என்று கூறுகின்றனர். திருச்சுற்றின் வெளிப்பகுதியில் மேற்கில் ஒரு நடுகல் உள்ளது. இந்த நடுகல்லுக்கும் முனியப்பன் என்று பெயர். இச்சிற்பத்தின் உருவ அமைப்பு முறையைக் கொண்டு இது கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததெனக் கூறலாம்.

கல்லாவி என்ற ஊர்ப் பெயர் இங்குள்ள நடுகல்லைக் காரணமாகக் கொண்டு வந்திருக்கலாம். இதை கல் + ஆவி என்று பிரிக்கலாம். வீர மரணம் எய்திய வீரனின் ஆவி கல்லில் உறைவதாக மக்கள் நம்புகின்ற நம்பிக்கையை ஒட்டியே 'கல்லாவி' என்று இவ்வூருக்குப் பெயரேற்பட்டுள்ளதெனலாம்.

## சிவலிங்கத்தில் இறைவன் பெயர்

**கிழக்குக் கடற்கரைச் சாலையில் மாமல்லபுரத்திற்கு அருகில் உள்ள கோவளம் கைலாசநாதர் கோயிலில் மூன்று கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு கல்வெட்டு சிலலிங்கத்தின் ஆவுடையார் பகுதியில் பொறிக்கப்பட்டுள்ளது 11-12-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ள இக்கல்வெட்டு 'ஸ்ரீசாத்தெருமான் மூர்த்தி பேர்' என்ற வாசகத்துடன் உள்ளது. இறைவனின் பெயர் 'சாத்தெருமான் மூர்த்தி' என லிங்கத்திலேயே பொறிக்கப்பட்டுள்ளமை, இதுவரை, அறிந்திராத ஒன்றாகும். 'சாத்து' என்பது வணிகக் குழுக்களைக் குறிப்பிடும் சொல். கோவளம், இடைக் காலத்தில் ஒரு வணிகதுறைமுகமாக இருந்தது. இங்கு படியெடுக்கப்பட்டுள்ள மற்றொரு 16-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு, இவ்வூரில் பாக்கு, பஞ்சு மற்றும் பிற சரக்குகளுக்கு வரிகள் வசூலித்துக் கோயில் வழிபாட்டிற்கு வழிவகுத்ததைக் குறிப்பிடுகிறது.**

**தகவல்: *திரு. கி. சு. சம்பத்,* கல்வெட்டாய்வாளர்**

# 6 தரங்கம்பாடியில் கண்டறியப்பட்டுள்ள நாணயங்கள்

கா. நெடுஞ்செழியன்,
கல்வெட்டாய்வாளர், பூம்புகார்

டென்மார்க் நாட்டினர் தரங்கம்பாடியில் 1620 முதல் 1845 வரை சுமார் 225 ஆண்டுகள் ஆட்சி செய்தனர். அவர்கள் வெளியிட்ட நாணயங்கள் ஏறக்குறைய 1000க்கு மேல் தரங்கம்பாடியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன மேலும், தரங்கம்பாடியில் ரஷ்ய முத்திரை, சோழர், நாயக்கர் காலத்து நாணயங்களும் சேகரிக்கப் பட்டுள்ளன.

## டேனிஷ் மன்னர்கள் வெளியிட்ட காசுகள்

தரங்கம்பாடி நாணயங்கள் பொன், வெள்ளி, ஈயம், செம்பு, தகரம் முதலிய உலோகங்களால் ஆனவை. பகோடா, பனோ (FANO) நாயலைனர், ஈயக்காசுகள், செப்புக்காசுகள், டின்காசுகள் என இவை அழைக்கப்பட்டன. ஏழாவது கிரிஸ்டியன் காலத்தில் வருடம் குறிக்கப்படாமல் பொன் கலந்த நாணயம், பகோடா வெளியிடப்பட்டது. அதன் அன்றைய மதிப்பு ரூ. 3.50 (1 வராகன்). ஐந்தாம் பிரெடரிக் காலத்தில் இரண்டு தங்க நாணயங்கள் வெளியிடப்பட்டன. மன்னர் வாரியாகக் காசு வகைகளின் எண்ணிக்கை கீழேதரப்பட்டுள்ளது.

| மன்னர்கள் | ஆண்டு | வெளியிடப்பட்ட காசுகளின் வகைகள் |
|---|---|---|
| 1. கிரிஸ்டியன் IV | 1588-1648 | 90 |
| 2. பிரடெரிக் III | 1648-1670 | 60 |
| 3. கிரிஸ்டியன் V | 1670-1699 | 60 |
| 4. பிரடெரிக் IV | 1699-1730 | 15 |
| 5. கிரிஸ்டியன் VI | 1730-1746 | 20 |
| 6. பிரடெரிக் V | 1746-1766 | 40 |
| 7. கிரிஸ்டியன் VII | 1766-1808 | 70 |
| 8. பிரடெரிக் VI | 1808-1839 | 30 |
| 9. கிரிஸ்டியன் VIII | 1839-1848 | 10 |

### காசுகளின் வகை

காசுகளின் வகை வேறுபாடுகள் அவற்றில் உள்ள உருவங்கள் எழுத்துக்களின் வகையில் பிரிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக கிரிஸ்டியன் வெளியிட்ட செப்புநாணயத்தில் ஒரு காசு மீது N போடப்பட்டிருக்கும். மற்றொரு வகையான நாணயத்தில் முன்புறத்தில் TRA, NGEB, ARI என மூன்று வரிகளிலும் பின்புறத்தில் DAN, NSBO, RG என மூன்று வரிகளிலும் குறிக்கப்பட்டிருக்கும். 3-வது வகை நாணயத்தில் தரங்கம்பாடியின் வரைபடம் குறிக்கப் பட்டிருக்கும். 33-வது வகை நாணயத்தின் முன்புறத்தில் DANS, BORG என இரண்டு வரிகளிலும் மறுபுறத்தில் DAN, MAR, CK என மூன்று வரிகளிலும் காணப்படும். 54வது வகை நாணயத்தில் C-4 ஆண்டு இல்லாத டேனிஷ் கோட்டையின் வரைபடம் இருக்கும். சில நாணயங்களில் மீன், யானை, மயில், குதிரை கிரீடம், சிலுவை போன்ற உருவங்களும் காணப்படுகின்றன. டேனிஷ் மன்னர்கள் வெளியிட்ட பெரும்பாலான நாணயங்கள் ஈயகாசுகள். இவற்றில் DOC, DAC என டேனிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியைக் குறிக்கும் எழுத்துக்கள் குறிப்பிடப்பட்டிருக்கும்.

### பிற நாட்டுக் காசுகள்

தரங்கம்பாடி கடற்கரைப் பகுதியில் இரண்டாம் வாலான்டைன் காலத்து செப்புக் காசுகள் சில கண்டறியப்பட்டுள்ளன. கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் தரங்கம்பாடி உரோமானிய நாட்டுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பைப் புலப்படுத்தும் சான்றாக இவற்றைக் கருதலாம்.

சதுரமான துளை உடைய சீன நாட்டு அச்சுக்காசுகள் கி. மு. 2-ஆம் நூற்றாண்டில் இருந்தே சீனாவில் வழக்கில் இருந்துள்ளன. தரங்கம்பாடியில் இக்காலக்கட்டத்தைச் சேர்ந்த செம்புக் காசுகள் மிகுதியாகக் கிடைப்பது குறிப்பிடத்தக்கது. சீன நாட்டுடன் தரங்கம்பாடி கொண்டிருந்த வாணிப உறவைத் தெரிவிக்கும் சான்றுகள் இவை எனலாம்.

தரங்கம்பாடியில் பராக்கிரமபாகு என பெயர் பொறித்த 11, 12-ஆம் நூற்றாண்டு ஈழத்துச் செப்புக்காசுகளும் மிகுதியாகக் கிடைக்கின்றன. இவை இலங்கை தரங்கம்பாடியுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்புக்கு சிறந்த சான்றுகளாகும்.

## இரஷ்ய முத்திரை

தரங்கம்பாடியில் கண்டுபிடிக்கப்பட்ட இரஷ்ய முத்திரை ஒன்று வணிக தொடர்புக்கு சிறந்த சான்றாக விளங்குகிறது. ஈயத் தால் ஆன இம்முத்திரையில் செயின்ட் பீட்டர் பர்க் என எழுதப்பட்டு நடுவில் இரட்டைத் தலை கழுகும், மேல்புறம் 1781 என்ற ஆண்டும் குறிக்கப்பட்டு உள்ளது. இரஷ்யா தமிழகத்துடன் கொண்டிருந்த வணிகத் தொடர்புக்கு இது ஒரு நல்ல சான்றாகும். தரங்கம்பாடி பல வெளிநாடுகளுடன் கொண்டிருந்த வாணிபத் தொடர்பு தரங்கம் பாடியில் கிடைக்கும் நாணயங்களிலிருந்து நன்கு தெரிய வருகின்றது.

## நீர்வழக்காட்டில் இறந்தவர்க்குப் பிராயச்சித்தம்

தண்டலம் ஊரைச் சேர்ந்தோர்க்கும் மங்கலங்கிழான் திருவன் என்பவருக்குமிடையே நீர் தொடர்பாகப் பிணக்கு ஏற்பட்டது. இதனால் மங்கலங்கிழான் இறந்து போனான். அவனுக்குப் பிராயச்சித்தமாக மாகறால் அகத்தீஸ்வரமுடையார் கோயிலில் ஒரு நந்தாவிளக்கு எரிக்கத் தண்டலம் ஊரைச் சேர்ந்தோர் 1000 குழி நிலம் கொடுத்துள்ளனர். இச்செய்தி அண்மையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மாகறில் படியெடுக்கப்பட்ட கல்வெட்டிலிருந்து அறியப்பட்டுள்ளது.

> "ஏரிக்கீழ் நாட்டு குண்டி ஆற்றுத் தண்டலத்து ஊருக்குச் சமைந்து மழவன் கூத்தன் — இவ்வனைவோம்..மங்கலங் கிழாந் திருவன் செல்வனும் எங்களுடன் நீர்வழக்காட்டுச் சுட்டி பிரமாதி பட்டமையில் இதுக்கு பிராயச்சித்தம் விதித்தபடி"

என்று கல்வெட்டு வாசகம் தொடர்கிறது. இது இரண்டாம் இராசராசன் காலத்தியக் (கி.பி. 1146-1171) கல்வெட்டாகும்.

தகவல் : **முனைவர் ஆ. பத்மாவதி**
சிறப்பு நிலைக் கல்வெட்டாய்வாளர், சென்னை

# 7 சோழனை எறிஞ்ச கோவீரபாண்டியனின் வட்டெழுத்துக் கல்வெட்டுகள்

**பொ. இராசேந்திரன்**
**முனைவர் வெ. வேதாசலம்**
சிறப்புநிலை கல்வெட்டாய்வாளர்கள், மதுரை

சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டை வெளியிட்ட இராஜசிம்மன் (கி.பி. 900-920) தனது ஆட்சிக்காலத்தின் இறுதியில் பாண்டிய நாட்டை இழந்து இலங்கைக்குச் சென்றான். இலங்கை மன்னன் அவனுக்குத் தஞ்சம் தந்தான். ஆனால் பாண்டியனுக்குப் படையுதவி அளிக்கும் சூழல் இலங்கையில் இல்லை. இதனால் தனது அரச முடியையும் அரசகுலச் சின்னங்களையும் இலங்கையில் வைத்துவிட்டுத் தனது தாய் பிறந்த நாடான சேரநாட்டிற்குச் சென்று இறுதி வாழ்வைக் கழித்தான். இத் தகைய சூழலில் கி.பி.927 முதல் 946 வரை முதற்பாரந்தக சோழனின் கல்வெட்டுகள் பாண்டிய நாடெங்கும் காணப்படுகின்றன.[1] பாண்டியநாடு இக்காலத்தில் சோழர் ஆதிக்கத்தில் இருந்தது என்பதை இக்கல்வெட்டுகள் உறுதிப்படுகின்றன.

இத்தகைய சூழலில் பாண்டிய நாட்டில் மீண்டும் பாண்டியரது ஆட்சியைக் கொண்டு வந்தபெருமை இராஜசிம்மனின் மகன் வீர பாண்டியனைச் சாரும். இவன் பாண்டிய நாட்டை கி.பி. 946 முதல் 966 முடிய ஆண்டான். இவனுக்குச் 'சோழாந்தகன்', 'சோழன் தலை கொண்ட வீரபாண்டியன்' என்ற பட்டப்பெயர்கள் உண்டு.[2] சோழாந்தகன் என்றால் சோழனுக்குக் காலன் (எமன்) போன்றவன் என்று பொருள். 'சோழன் தலைகொண்ட வீரபாண்டியன்' என்ற சொற்றொடர்க்கு இருவேறு பொருளை வரலாற்றாசிரியர் கூறுகின்றனர். சோழனைக் கொன்றதால் இப்பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று ஒருசாரார் கருதுகின்றனர்[3]. கே. ஏ. நீலகண்டசாஸ்திரிகள் 'தலை கொண்ட' என்ற சொற்றொடருக்குத் தலையை அரிந்தான் அல்லது கொன்றான் என்று பொருள் கூறுவது தவறு என்று கூறுகிறார். தோற்ற அரசனின் முடிமேல் அவனைத் தோல்வியுறச் செய்த மன்னன் தனது காலடியை வைக்கும் முறையையே இது குறிக்கிறது என்று கருதுகின்றார்.[4]

'சோழன் தலை கொண்டவன்' என்ற பெயரை வீரபாண்டியன் தனது ஆறாவது ஆட்சியாண்டு வரை புனைந்து கொள்ளவில்லை; அது வரை மாறஞ்சடையன் என்ற பெயரையே பெற்றிருந்தான் என்று

கூறுவர்.[5] ஆனால் வீரபாண்டியன் தனது ஆறாவது ஆட்சியாண்டிற்கு முன்பாகவே 'சோழனை எறிஞ்ச கோவீரபாண்டியன்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருந்தான். இதற்குச் சான்றாக உள்ள இரண்டு வீர பாண்டியனின் வட்டெழுத்துக் கல்வெட்டுகளை மதுரை மாவட்டம் பேரையூர் வட்டத்து மேலத்திருமாணிக்கம் சிவன்கோயிலில் தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை கண்டறிந்துள்ளது.[6] இக்கல்வெட்டுகளில் பழமையானது வீரபாண்டியனின் மூன்றாம் ஆட்சியாண்டிற்குரியதாகும். எனவே வீரபாண்டியன் 'சோழன் தலைகொண்ட கோவீரபாண்டியன்' என்று அழைக்கப்படுவதற்கு முன்பாகச் சோழனைப் போரில் வெற்றி கண்டவன் என்ற பொருளில் 'சோழனை எறிஞ்ச கோவீரபாண்டியன்' என்ற பெயரைப் பெற்றிருந்தான் என்று கூறலாம். இச்செய்தி பாண்டியர் வரலாற்றிற்கு இதுவரை கிடைத்திடாத புதிய செய்தியாகும்.

## மேலத்திருமாணிக்கம் கல்வெட்டுகள்

மேலத்திருமாணிக்கத்தில் சிவனது கருவறையைச் சுற்றியுள்ள தெற்கு வெளிச்சுற்று மதிலின் உட்புறத்தில் ஒன்றும், அம்மன் கோயில் கருவறையைச் சுற்றி நடந்துவரும் தெற்குப்புற நடைபாதை பாவுகல்லில் மற்றொன்றுமாக இரண்டு 'சோழனை எறிஞ்ச கோவீரபாண்டியன்' கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவை இரண்டும் தமிழ்மொழியில் வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.

## முதல் கல்வெட்டு

சிவனது கருவறைப் பகுதியிலுள்ள சோழனை எறிஞ்ச கோவீர பாண்டியன் கல்வெட்டு அவனது மூன்றாவது (யாண்டு க இதனெதிர் உ) ஆட்சியாண்டிற்குரியது (கி.பி.949). இக்கல்வெட்டில் இக்கோயில் இறைவன் முட்டநாட்டைச் சார்ந்த 'திருமணிக்கயத்து மூலத்தானத்து பெருமானடிகள்' என்று குறிப்பிடப்படுகின்றார். திருமணிக்கயம் என்ற ஊரின் பெயரே தற்போது 'திருமாணிக்கம்' என்று மாறியுள்ளது. திருமணிக்கயத்துப் பெருமானடிகளுக்காகத் திருவிளக்கு ஒன்று எரிப்ப தற்காகச் செம்மறியாடு பத்தும், வெள்ளாடு நாற்பதும் ஆக மொத்தம் ஐம்பது ஆடுகள் தானமாக அளித்ததை இக்கல்வெட்டு கூறுகிறது. இத்தானத்தை அளித்தவன் அருங்குளம் என்ற ஊரைச் சேர்ந்த பொது மவனக்கனாயின அத்தாணி எட்டி என்பவன் ஆவான். இவ்வாடுகளை முதலாகப் பெற்றுக்கொண்டு திருமணிக்கயத்துக் கோவிலுக்கு நாள் தோறும் நாராயம் என்ற உழக்கால் உழக்கு நெய் அளந்து வந்தவன் பெயரும் இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. மைக்கிற்குடி ஆயின செங்குளம் என்ற ஊரைச் சார்ந்த 'தென்தேவதிராவ்வழியன்' என்றும் 'தென்தேவனிராவழியன்' என்றும் இவன் கல்வெட்டில் குறிப்பிடப்படு கின்றான்.

**கல்வெட்டு**

1. ஸ்ரீசோழ(னை) எறிஞ்ச கோவீரபாண்டியர்க்கு யாண்டு ௪
2. இதனெதிர் ௨ இவ்வாண்டு முட்டநாட்டு திருமணிக்கயத்து
3. திருமூலத்தானத்து பெருமானடிகளுக்கு அரு
4. ங்குளத்து பொதுமவனக்கனாயின அத்தாணி எட்டி
5. அடுத்த ஆடு செம்மறி ௰ வெள்ளாடு ௪௰ ஆக ௫௰ ரனைச்சு வை
6. த்த விளக்கு ௧ ஆடு ௫௰ மைக்கிற்குடி ஆயின செங்குளத்து
7. இருக்கும் தென்தேவனிராவழியேன் விட்ட நெய் நியத நாராயத்தால்
8. உழக்கு மட்டுவேநாயி தென்தேவதிராவ்வழியன்.

**இரண்டாம் கல்வெட்டு**

*மேலத்திருமாணிக்கம் அம்மன் கோயிலில் கண்டறியப்பட்ட சோழனை எறிஞ்ச கோவீரபாண்டியன் கல்வெட்டும் முட்டநாட்டுத் திருமணிக்கயத்து மூலத்தானத்துப் பெருமானடிகள் கோயிலில் விளக்கு எரிப்பதற்காக விளக்குக் கொடை அளித்ததைக் கூறுகிறது. இக் கல்வெட்டின் சில பகுதிகள் தேய்ந்து போய்ச் சிதைவுற்றுள்ளன. இதனால் இதன் முழுப் பொருளையும் அறியமுடியவில்லை. முட்டநாட்டு ஊரைச் சார்ந்த நக்கன்-க்கிரன் என்பவன் தனது மகனைச் சார்த்தி இத்திரு விளக்குக் கொடையைச் செய்துள்ளான். இதற்காக இருபத்தைந்து ஆடுகள் அளித்தான் என்ற செய்திவரை ஓரளவு கல்வெட்டு நன்றாக உள்ளது. அதற்குப் பிறகு உள்ள இறுதிவரிகள் சிதைந்து போய்விட்டன. இக்கல்வெட்டு வீரபாண்டியனின் நான்காவது ஆண்டிற்குரியது (கி.பி, 950) என்பதை உய்த்தறியக்கூடிய நிலையில் கல்வெட்டு உள்ளது.*

**கல்வெட்டு**

1. ......ஸ்ரீ கோ வீரபாண்டியர்க்கு ௪
2. (இதனெதிர் ௨) இவ்வாண்டு முட்டநாட்டுத் திருமணிக்க
3. யத்து மூலத்தானத்துப் பெருமானடிகளுக்கு இன்
4. நாட்டு . . . குடி நக்கன்-க்கிரன் என்மகன் மாதே(௧)
5. . . . . . . . த்தி அடுத்த ஆடு ௨௰௫ . . . .
6. . . . .

மேற்கண்ட இரு கல்வெட்டுகளும் முற்காலப் பாண்டியர் வரலாற்றிற்குப் புதிய ஒளியைத் தருகின்றன. மேலும் வீரபாண்டியன் கி.பி. 949க்கு முன்பாக சோழனை வென்று பாண்டிய நாட்டில் தனது ஆட்சியை ஏற்படுத்தினான் என்பதையுல் உணர்த்துகின்றன.

**அடிக்குறிப்புகள்**

1. என். சேதுராமன், பாண்டியர் வரலாறு' கும்பகோணம் 1989, பக்.14.
2. S.I.I. Vol. XIV Nos. 84&85.
3. கே. வி. இராமன், 'பாண்டியர் வரலாறு', தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை. பக். 86.
   வீரபாண்டியன் எந்தச் சோழனைக் கொன்றான் அல்லது வெற்றி பெற்றான் என்பதிலும் கருத்து முரண்பாடுகள் உள்ளன. ஏ.எஸ். இராமநாத அய்யர் முதலாம் பராந்தக சோழனையும், சேதுராமன், பராந்தகனின் மகன் உத்தமசீலியையும் வீரபாண்டியன் கொன்றதாகக் கூறுகின்றனர்.
4. K.A. Nilakanta Sastri, 'The Pandyan Kingdom' Madras 1972, p.102-103.
5. என். சேதுராமன், பாண்டியர் வரலாறு, பக்.15.
6. இக்கல்வெட்டுகளைத் தொல்லியல் துறைக் கல்வெட்டாய்வாளர்கள் பொ. இராசேந்திரன், வெ. வேதசாலம், இர. ஜெயராமன் ஆகியோர் கண்டறிந்து படியெடுத்தனர்.

## பாண மன்னன் பெயரில் விஜயாதித்த ஈசுவரம்

திருத்தணி வட்டத்தில் ஆர். கே. பேட்டைக்கருகிலுள்ள விளக்கணாம் பூண்டியில் உள்ள விஜயாலீசுவரர் கோயில், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு லருகிறது. இக்கோயிலின் வெளிப்புற மண்டத்திலுள்ள பத்தாம் நூற்றாண்டுக் கல்வெட்டில் விஜயாதித்த வாணவராயரின் ஆட்சி குறிப்பிடப் பட்டுள்ளது. எனவே, இக்கோயில் விஜயாதித்த வாணவராயரின் பெயரால் விஜயாதித்த ஈசுவரம் என்ற பெயரில் எடுக்கப்பட்டு அப்பெயரே காலப்போக்கில் விஜயாலீசுரம் என்று மருவியிருக்க வாய்ப்புள்ளது. பல்லவர்களின் ஆட்சி முடிந்து விட்ட நிலையில், சோழர்களின் மேலாதிக்கத்தை ஏற்காத மாவலிவாண அரசர்கள் வேலூர் மாவட்டம் தீக்காலி வல்லத்தைத் தலைமையிடமாகக் கொண்டு சுயாட்சி புரிந்தபோது எழுப்பப்பட்ட கோயிலாக இக்கோயில் இருக்கலாம். இக்கோயிலின் அர்த்த மண்டபத் தூண்களில் திருமயானமுடைய திண்டிபடாரர், மற்றும் அவரது கேவகன் ஆலையன் போன்றோரைக் குறிக்கும் பத்தாம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் உள்ளன.

தகவல்: **ச. கிருஷ்ணமூர்த்தி**, தொல்லியல் அலுவலர்

**சீ. இராமச்சந்திரன்**, சிறப்புநிலை கல்வெட்டாய்வாளர், சென்னை

# தாமரைக்குளம், இராசராசபுரம் வணிகர் கல்வெட்டுக்கள்

8

நாக கணேசன்
கல்வெட்டாய்வாளர், உதகமண்டலம்

திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டத்தில் பழனிக்கு அருகில் சுமார் 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது **தாமரைக்குளம்.** பொருந்தலாறு என்னும் ஆற்றின் கரையில் அமைந்துள்ள இவ்வூர் வரலாற்றுப் பெருமைமிக்க ஊராகும். இவ்வூரின் முற்பாண்டியர் காலத்தைச் சேர்ந்த திரிபுராந்தகர், நடராசர் செப்புத் திருமேனிகள் மற்றும் பத்தாம் நூற்றாண்டுக் கலைப்பாணியினாலான பைரவர், சப்தமாதர் சிற்பங்கள் ஆகியவை கண்டறியப்பட்டுள்ளன.

இத்தகு சிறப்பு வாய்ந்த இவ்வூரில் உள்ள கரும்புத் தோட்டத்தில் சுமார் மூன்று அடி உயரமும், ஒரு அடி அகலமும் உள்ள ஒரு கற்றூணின் இரண்டு புறமும் தமிழ் எழுத்தில் எழுதப் பட்டுள்ள கல்வெட்டு ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. கல்வெட்டின் முடிவில் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு குத்து விளக்குகள், ஒரு கலசம் (பூரண கும்பம்) ஒரு கலப்பை, ஒரு சுருள்பட்டா (ஆயுதம்) ஆகியவை கோட்டுருவங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இச் சின்னங்களை வைத்தே இக்கல்வெட்டு ஒரு வணிகக் குழுவோடு தொடர்புடையது என்பது தெரியவரும்.

### கல்வெட்டுப் பாடம்

முன்பக்கம்

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப
2. ரகேசரி பன்மர
3. ாந திரிபுவநசக்ர
4. வத்திகள் ஸ்ரீ வீ
5. ரசோழ தேவர்கு
6. த் திருவெழுத்திட்
7. டுச் செல்லா நிந்ற
8. திருநல்லியாண்
9. டு ஒந்பதாவது வை
10. வகாவி நாட்டு அம
11. ர புயங்கச் சதுர்வே
12. தி மங்கலத்து போ
13. சி அரிதாஸந் பொந்
14. வில்லியாந ஸ்ரீகாழி
15. ப் பிள்ளையேந் பூமி

பின்பக்கம்

16. திருத்தி ஐன்னூ
17. ற்றுவ குல தலை
18. வசக்கலெந்று
19. பேரிட்டேந் சீகாழி
20. பிள்ளையேந்
21 ஐன்னூற்று
22 வர் ரக்ஷை

இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் அரசன், பரகேசரி வீர சோழன், கொங்கு சோழ மரபினன் ஆவான். இவனது தந்தை ராஜகேசரி குலோத்துங்க சோழன் (கி. பி. 1149-1183) ஆவான். வீர சோழனின் ஆட்சிக் காலம் 1183 முதல் 1206 வரையாகும். இவ்வீரசோழன் தென்கொங்கு, வடகொங்கு இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து ஆட்சி செய்தவன். தாமரைக்குளம் கல்வெட்டின் ஆட்சி ஆண்டு ஒன்பது என்பதால் இது கி.பி. 1192 ஆம் ஆண்டினது என்பது பெறப்படும். இக்கல்வெட்டில் வைகாவி நாடு எனக் குறிப்பிடப்படும் நாடு வைகாவூர் நாடு என்பதன் வேறு வடிவமாகும். பழனியைச் சுற்றியுள்ள பகுதி வைகாவூர் நாட்டுக்குள் அடங்கும். ஊரின் பெயர் அமரபுயங்கச் சதுர்வேதி மங்கலம் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்த அமரபுஜங்கச் சதுர்வேதிமங்கலத்தைச் சேர்ந்த போசி அரிதாஸந் பொந்வில்லியாந ஸ்ரீகாழிப்பிள்ளை என்பவர் பூமி திருத்தி ஐந்நூற்றுவர் குலதலை வசக்கல் என்று பேரிட்டு ஐந்நூற்றுவர்க்கு வழங்கியுள்ளார். இதைக் காப்பதும் ஐந்நூற்றுவர் கடமை என்பது கல்வெட்டின் முடிவில் கூறப்பட்டுள்ளது. கல்வெட்டின் முடிவுக்குப் பின் உள்ள சின்னங்களும் வணிகக் குழுவினரோடு தொடர்புடைய சின்னங்களாகும்.

## இராசாபுரம் வணிகர் கல்வெட்டு

பழனியிலிருந்து தாமரைக்குளம் செல்வதற்கு முன்பாகவே அரை கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது ராசாபுரம் என்னும் சிற்றூர். இரண்டு ஊர்களையும் பொருந்தலாறுதான் பிரிக்கிறது. இந்த இராசாபுரத்தின் பழைய பெயர் இராசராசபுரம் ஆக இருந்திருக்கலாம். இவ்வூரிலும் பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் மண்ணில் பாதி புதைக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று உள்ளது.

மண்ணில் புதைத்து சிமிண்ட் போட்டு கெட்டிக்கப்பட்டதால் கல்லைத் தோண்டி எடுக்க இயலவில்லை. இக்கல்லிலும் ஒரு கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. முதலும், முடிவும் சிதைந்துள்ள இக்கல்வெட்டின் முடிவில் வாள், கத்தி, கலசம், உடுக்கை போன்ற சின்னங்களும் செதுக்கப் பட்டுள்ளன. இவற்றைப் பார்த்தவுடனேயே இக்கல்வெட்டும் வணிகர்குழு தொடர்பான செய்தியைத் தரத்தக்கது என்பதை அறியலாம்.

**கல்வெட்டுப் பாடம்**

1. ....பேரால் ஆ....
2. [ன] வகாவூ [ர்] நாட்டு...
3. புரத்து ஆளுடையார் ஸ்ரீ .....
4. உடையாற்கு நாமும் நம் ஸ்ரீ ருத்ரமா
5. [ஹே]சுவரரும் பதி எண்பூமியில் நம் கோவணவரும்
6. ... நந்தவனங்களும் இவூரும் இவூர் பிடாகைகளிலும்
7. பெறும் ஏறும்பிச்சையும் ஆடு மாடும் பிச்சையும் பேறு
8. இவை ஆளுடையார் புரந்தர சோழீஸ்வரமுடையாற்கு
9. திருப்பறிவட்டம் சாத்துவார்கள் ஆக குடுத்தோ
10. ம் இதுக்கு லங்கினம் பண்ணி .... சிவா ...
11. .... கும் பிழைத்த ...
12. .... பட்டது படுவார்கள் ஆகவும் நம் தே
13. ... வர்கள் கொன்றது ....

இக்கல்வெட்டிலும் பதினெண்பூமி (திசை ஆயிரத்து ஐநூற்று வர்) என்னும் வணிகக் குழுவினர் இவ்வூர்ச் சிவன் கோயிலில் நந்தவனம் அமைத்து பரிவட்டம் (ஆடை) சாத்துவதற்குக் கொடை அளித்துள்ளனர் என்ற செய்தி பெறப்படுகிறது.

மேற்சொன்ன இரண்டு கல்வெட்டுகளும் வணிகர் தொடர் பாக இருப்பதால் பொருந்தலாற்றின் கரை வழியே ஒரு பெருவழி சென்றிருக்கலாம் என்பது உய்த்துணரப்படும்.

# 9 கன்னியாகுமரிப் பகுதியில் பண்டைய அஞ்சினான் புகலிடங்கள்

**தே. கோபாலன்**
தொல்லியல் அலுவலர்,
நாகர்கோயில்

தமிழகத்தில் வலிவான பேரரசுகள் இல்லாத நிலையில் ஆங்காங்கு சிறுதலைவர்கள் பூசலில் ஈடுபடுவதும், பயிர் விளைச்சல், செல்வம் முதலியவற்றைக் கொள்ளையிடுவதுமாகத் தங்கள் வலிமையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். இதனால் சிற்றூர்களும், குடியிருப்புகளும் தொல்லைக்குள்ளாகிப் பாதுகாப்புத் தேடும் நிலை உண்டாயிற்று. வலிமையுடைய குறுநிலத் தலைவர் களையும், தங்களுக்கென்று படைகள் வைத்திருந்த வணிக மற்றும் வேளான் குழுக்களும் பாதுகாப்புத் தர முன்வந்தன. பாதுகாப்புத் தருவோருக்குத் தங்கள் ஊர் பகுதியில் விளைச்சல் அல்லது வரி வருவாயில் ஒரு பகுதியை பிரதிபலனாக அளித்தன. இப்படி அளிக்கப்பட்ட வருவாய், பாடிக்காவல் என்ற பெயரில் தமிழகக் கல்வெட்டுகளில் சொல்லப்படுகின்றது. பாதுகாப்பளிக்கப்பட்ட இடம் இன்னவருடைய பாதுகாப்பில் உள்ளது என்பதனை வெளிப் படுத்தும் வகையில் அவ்வூர் எல்லைப் பகுதியில் கற்கள் நடப்பட்டு கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டன. அப்படிப் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளில் அவ்விடங்கள் இன்னவரது 'ஆசிரியம்' என்றும் இன்னவரது பாதுகாப்பில் உள்ள 'அஞ்சினான் புகலிடம்' என்றும் குறிப்பிடப்பட்டன.

கன்னியாகுமரிப் பகுதியில் 'அஞ்சினான் புகலிடம்' என்று குறிக்கப்படும் கல்வெட்டுகளை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை குமரி முட்டம்[1], பஞ்சவன்காடு[2], பத்மநாதபுரம் அரண்மனை அருங் காட்சியகம்[3], அகத்தீஸ்வரம்[4], அழகிய பாண்டியபுரம்[5], பூதப்பாண்டி ஆகிய இடங்களில் படியெடுத்துள்ளது.

### குமரிமுட்டம்

கன்னியாகுமரிக்கு வடகிழக்கே சுமார் 2 கி மீ. தொலைவில் குமரி முட்டம் என்ற கடற்கரை கிராமம் உள்ளது. அது இப்போது சின்னமுட்டம் என அழைக்கப் பெறுகிறது. இங்கு கிடைத்த

தூண் கல்வெட்டு, இங்கு வசித்து வந்த மீனவர்கள் அடிக்கப் பட்டும், துன்புறுத்தப்பட்டும், மீன்கள் பறிக்கப்பட்டும் மிகுந்த துன்பங்களுக்கு ஆளாகி வந்தனர் எனத் தெரிவிக்கிறது. மூத்த கங்கன், இளையகங்கன் உள்ளிட்ட அவ்வூர் மக்களுக்கு பாது காப்பளித்து வேணாட்டரசர் சிறவாய் மூத்த தம்பிரான் கி.பி.1526-ல் அஞ்சினான் புகலிடம் அளித்து, குடிகிடந்து கொள்ள அபயமளித்த செய்தியை அது சொல்கிறது.

1. கொல்லம் எாக ஔ
2. பங்கூனி மீ உ௰உ தம்பிரானார்
3. சிறவாய் மூத்த தம்பிரானார்
4. திருவுள்ளம் பற்றி முட்டத்தில்
5. துறையில் குடிமக்களில்
6. மூத்தகங்கன் இளையகங்கன்
7. உள்ளிட்டாற்கு அடிபிடி அனி
8. ,யாயம் புன்கொசனம் பெறா
9. ப்பேறு மீன் பறிக்குதல் தவி
10. ர்த்தமைக்கு அஞ்சினா[ன்]பு
11. கலிடமாக குடி கிடந்
12 து கொள்ளவும்

**பஞ்சவன் காடு**

அகஸ்தீஸ்வரம் வட்டம், பஞ்சவன் காட்டிலுள்ள கி. பி. 17ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு சேனான சோழதேவர் என்பவன் ஒன்றுபட்ட வீரகேரளநல்லூர் குடிகளுக்காக அஞ்சினான். புகலிடம் அமைத்துக் கல்வெட்டு வெட்டிக் கொடுத்துள்ளான். கல்வெட்டின் கீழ் குதிரை மீதமர்ந்த வீரனின் உருவமும், வில் அம்பு ஆயுதங் களும் புடைப்புச்சிற்பங்களாக உள்ளன.

1. ஸ்வஸ்திஸ்ரீ காத்திகை
2. ௰௧ உ வீரகேரள
3. நல்லூர் குடிக
4. ள் ஒன்றுப் ப
5. ட்ட அஞ்சினான்
6. புகலிடம் என்
7. றுகல்லு வெ
8. ட்டிக்குடுத்
9 தமைக்கு சே

10. னனான சே
11. ாழ தேவர் தன்
12. மம் வ.

**பத்மநாபபுரம் அருங்காட்சியகம்**

கொல்லம் 670(கி.பி. 1495)ம் ஆண்டைச் சேர்ந்த பத்மனாபபுரம் அரண்மனை அருங்காட்சியகத்தில் இருக்கும் கல்வெட்டு ஆவண கர்த்தர், வலங்கை, இடங்கை, பலதரக்காரர்களும் தொல்லை கொடுக்காமலிருக்கவும், சிவமாந்தர்களை பாதுகாப்பாக குடியேற செய்யவும், சாலை அகத்துப் பிள்ளையார் கோயிலை அஞ்சினான் புகலிடமாக அளித்ததை குறிக்கிறது. கல்வெட்டின் ஒரு பகுதி பின்வருமாறு:

1. ......
2. இதனகத்தின் சங்
3. கேதம் சிவமாந்
4. தர் குடி ஏறும்படியு
5. ம் இதனகத்து ஆவன க
6. (ற்)தார் இடங்கை வலங்கை
7. ..க பலதரக்காரரும்
8. காயின்மை செய்யாம அ
9. ஞ்சினான் புகலிடம்

**அகத்தீஸ்வரம்**

கி. பி. 15-16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அகத்தீஸ்வரம் ஊர்க்கல்வெட்டு பண்டசாலையை அஞ்சினான் புகடலிமாக அளித்ததை தெரிவிக்கிறது. அது பின்வருமாறு:

1. பண்டசாலைக்கு அ
2. ஞ்சினான் புகலிடமா
3. க நால் எல்லைக்குள்
4. ப்பட்ட சங்கேதம்

**அழகிய பாண்டியபுரம்**

அழகியபாண்டிபுரம் வெங்கடாஜலப் பெருமாள் கோயிலுக்கு பின்புறமுள்ள பாறைக் கல்வெட்டு ஆதிகேசவப் பெருமாளுக்கு சங்கரநாராயண வீரராமவர்மன் திருமடத்தில் பூசைக்காக விடப் பட்ட நிலத்தை அஞ்சினான் புகலிடமாக அளித்ததை தெரிவிக் கிறது. இக்கல்வெட்டு கி.பி. 17-18ம் நூற்றாண்டு சார்ந்ததாகலாம்.

1. ஸ்வஸ்திஸ்ரீ பெருமாள் ஆதிகேசவப்
2. பெருமாளுக்கு சங்கர நாராயணைச் சிரி
3. வீரராமவர்மன் திருமடத்தில்
4. பூசைக்கு உள்ள தேசம் அஞ்சினான் புகலிடம்

**பூதப்பாண்டி**

பூதப்பாண்டியில் ஜீவா நூல்நிலையம் அருகேயுள்ள தனிக்கல் கல்வெட்டு, உதயமார்த்தாண்டன் பெருந்தெருவை அஞ்சினான் புகலிடமாக பூதலராமன் பெருந்தெரு என்ற பெயரில் வழங்கியதை தெரிவிக்கிறது. இக்கல்வெட்டும் கி.பி. 17-18-ம் நூற்றாண்டு சார்ந்ததாகலாம்.

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. உதையமா
3. ர்த்தாண்ட
4. ன் பெருந் தெ
5. ரு அஞ்சினான்
6. புகலிடமான
7. பூதலராமன்
8. பெருந்தெரு

இதுவரை பார்த்த அஞ்சினான் புகலிடம் கல்வெட்டுகளிலிருந்து மீனவர் வாழ்ந்த இடத்தில் பாதுகாப்பு அளிக்கப்பட்டமை, நல்லூர் (கோயில் சார்ந்த ஊர்)க்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டமை, சிவமாந்தர் குடியிருப்பு, பண்டகசாலை, கோயில் பூசைக்கான நிலங்கள் ஆகியவற்றுக்குப் பாதுகாப்பு, மற்றும் பெருந்தெருவிற்குப் (வணிகர்தெரு?) பாதுகாப்பு அளித்து அறிவிப்புகளாக இக் கல்வெட்டுக்கற்கள் நிறுத்தப்பட்டிருந்தன என்பதை அறிகின்றோம். 16,17-ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் சமுதாய அரசியல் பிணக்குகள் இருந்தமையையும் அவற்றில் சிக்கிய வலிவு குன்றியோர்க்கு வலிவுள்ள, அரசும் சிற்றரசுகளும் பாதுகாப்புத் தந்ததோடு தீங்கிழைப்போர்க்கு எச்சரிக்கையும் செய்தன என்றும் அறிகின்றோம்.

அடிக்குறிப்புகள்

1. திருவிதாங்கூர் தொல்லியல் தொகுதி 4: பகுதி 2 எண் 129.
2,3 முனைப்புத் திட்டத்தில், படியெடுக்கப்பட்டன.
4. கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் தொகுதி 5 எண்: 1966/20
5. மேலது 1967/71.

# செங்கற்பட்டு மாவட்ட ஆவணங்கள்

**சென்ற இதழின் தொடர்ச்சி..**

இது தவிர கூத்தாடிமானியம்[1] தாசிமானியம்[2] புலவர்மானியம்[3] ஆகிய இனாம் நிலங்கள் இந்த ஓலைச்சுவடிக் கணக்குகளில் குறிக்கப்பட்டுள்ளன. ஆகவே பண்டைய தமிழ் மன்னர் காலங்களில் புலவர்களுக்கும் கலைஞர்களுக்கும் வழங்கப்பட்ட இறையிலி நிலங்கள் 18ஆம் நூற்றாண்டுவரை தொடர்ந்து நடைமுறையில் இருந்து வந்துள்ளன என்ற விவரமும் தெரியவருகிறது.

இந்த ஓலைச்சுவடிக் கணக்குகளில் குறிக்கப்பட்டுள்ள எண்கள் முற்றிலும் தமிழ் எண்களாகவே குறிக்கப்பட்டுள்ளன. இது தவிர இந்தக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலங்களின் வகைகள், வேளாண்மைப் பயிர்களின் பெயர்கள், மக்களின் இனப்பெயர்கள், நாணயங்கள் ஆகியவை குறியீடுகளால் குறிக்கப்பட்டுள்ளன. தற்போது தமிழ் எண்களை எழுதும் வழக்கம் முற்றிலுமாக ஒழிந்து போனதாலும் இதில் குறிப்பிடப்பட்டுள்ள குறியீடுகள் வழக்கொழிந்து போனபடியாலும் இவற்றைப் படிப்பது இயலாது. ஆகவே பழங்கால ஓலைச்சுவடிகளைப் படிப்பதில் தேர்ந்தவராகவும், தமிழ்க் கணிதத்தில் மேல்வாயிலக்கம், கீழ்வாயிலக்கம். நெல்லிலக்கம், குழிமாத்து ஆகிய வற்றை முற்றிலும் கற்றுத் தேர்ந்தவராகவும் இருப்பவர்கள் மட்டுமே இவற்றைப் படிக்கவும் படியெடுக்கவும் இயலும்.

பண்டைய கல்வெட்டுகளில் காணப்படும் மானியங்களும், இந்தச் சுவடிகளில் காணப்படுகின்றன. திருவிடைமருதூர்க் கல்வெட்டு ஒன்று கூத்தாடுவதற்கு மானியம் வழங்கியதைப் பற்றிக் கூறுகிறது[4] அதைப் போலவே இந்த ஓலைச்சுவடியில் ''கூத்தாடி மானியம் காணி $\frac{3}{4}$'' என்று கூறப்பட்டுள்ளது. இதனால் அவ்வகை மானியங்கள் 18-ஆம் நூற்றாண்டுவரை நடைமுறையிலிருந்து வந்ததெனத் தெரியவருகிறது.

இந்த ரொக்காதாயத்தில் காணப்படும் வரிவிதிப்புகளில் கல்வெட்டுகளில் காணப்படும் வரிகளும் உள்ளன. இந்த ஓலைச்சுவடிக் கணக்குகளில் ''சமுத்திரத்திலிருந்து எறங்கி வருகிற தினுசுக்குத்

தீர்வை வரவு''- என்றும், ''சமுத்திரத்தின் பேரிலே ஏறிப்போற சரக்குக்குத் தீர்வை'' என்றும் கடல் வாணிபப் பண்டங்களுக்கு சுங்கம் வசூலிக்கப்பட்ட செய்தியை ரொக்காதாயம் பகுதியில் சமுத்திர ஆதாயம் என்ற தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.[6]

பண்டைய செப்பேடுகளும், கல்வெட்டுகளும் அறக்கொடை சம்பந்தமான சாசனங்களானாலும் அவற்றால் நம் நாட்டின் பண்டைய மன்னர்களின் வரலாற்றினையும் ஆட்சிமுறையினையும் ஒருவாறு அறிந்துகொள்ள இயல்கிறது. இந்த ஓலைச்சுவடி ஆவணங்களில் ஊர் மக்களின் சமுதாய வாழ்க்கை பொருளாதார வசதி, வாணிபம் வேளாண்மை, குடியிருப்பு வசதி, நாகரிகம், பண்பாடு, நீதி, சமய வளர்ச்சி, அரசியல் போன்ற அனைத்து ஆய்வுகளுக்கும் முழுமையான, உண்மையான, விளக்கமான, சுவையான செய்திகள், கல்வெட்டு செப்பேடு சாசனங்களைவிட அதிக அளவில் கிடைக்கின்றன. இவை 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையானாலும் சங்க காலம் வரை நம்மை இழுத்துச் சென்று தமிழகப் பண்பாட்டை விளங்க வைக்கின்றன.

தவிர கல்வெட்டு செப்பேடு ஆகிய சாசனங்களில் சொல்லப் படும்செய்திகளை இந்த ஓலைச்சுவடி ஆவணங்களில் காணப்படும் செய்திகளைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளலாம், விளக்கமும் பெறலாம்.

**அடிக்குறிப்புகள்**

1. தெ. இ. க. தொகுதி 3 பாகம் 3 எண்-252.
2. செங்கற்பட்டு மாவட்ட ஓலைச்சுவடிக் கணக்குகள், கட்டு எண் 44 ஆ. திருப்போரூர்.
3. மேலது. கட்டு எண் 44ஆ, தையூர்
4. தெ. இ. க. தொகுதி 3 பாகம் 3 எண்-252
5. செங்கற்பட்டு மாவட்ட ஓலைச்சுவடிக் கணக்குகள் கட்டு எண் 119. உள்ளாவூர்.
6. மேலது. கட்டு எண் 44 அ. கோவளம்.

# SEMINAR ON RECENT EXCAVATIONS

The triple function, Seminar on Recent Excavations conducted at Andipatti and Modur, Exhibition of the Antiquities and the Book Releasing function was held on 22-06-2005 at Government Museum Theatre, Chennai-8, by the State Department of Archaeology in a very grand manner. The minutes of the seminar are summed up below.

The Technical Session of the seminar was inaugurated with the traditional lamp lighting ceremony by Dr. A. Sundara, Professor (Retd), Department of Ancient Indian History and Epigraphy, Karnataka University, Dharwad, Dr. S. Krishnamurthy, Director, International Institute of Tamil Studies, Chennai and Thiru T.S.Sridhar, I.A.S., Special Commissioner of Archaeology. Then the Special Commissioner of Archaeology introduced the topic through Power Point Presentation and honored the guests. He also explained the aim of this seminar and action taken for excavation work. Dr.A.Sundara in his inaugural address explained the importance of Neolithic and Megalithic sites in Dharmapuri District. He appreciated the historical importance of Alagankulam antiquities and findings of the excavations at Andipatti and Modur.

The first Technical Session was presided over by Dr. R. Chambakalakshmi, Professor(Retd), Jawaharlal Nehru University. Thiru. Natana Kasinathan, former Director of Archaeology, spoke about the early historic culture through excavations. He dated the Terracotta bull from Andipatti excavation to 2nd century BC. to first century BC. Dr. P. Shanmugam, Professor (Retd), Ancient History and Archaeology, University of Madras, delivered a lecture on the study of Medieval period through antiquities. In his speech

Dr. P. Shanmugam stressed that the Medieval period pottery should be studied properly with associate dated finds like coins and epigraphs. Mrs. S. Vasanthi. Archaeologist of our department presented a paper on the significance of the excavation at Andipatti.

The second Session of the seminor was chaired by Dr. T. Sathyamurthy, Superintending Archaeologist, Archaeological Survey of India, Chennai. The Special Commissioner of Archaeology introduced the scholars. Dr. B. Narasimaiah, Superintending Archaeologist(Retd), Archaeological Survey of India, pointed out that the horizontal excavations of the area and the study of the stratified layers will yield more evidences for the Neolithic culture of Modur. Dr.A.Sundara explained in detail about the Iron age Megalithic sites of South India. Thiru.S.Selvaraj, Archaeological Officer, Dharmapuri spoke on the significance of the excavation at Modur with the help of Power Point Presentation.

Valedictory address was delivered by Dr.A.Ekambara nathan, Prefessor and Head, Department of Ancient History and Archaeology, University of Madras. He complimented the Special Commissioner for having brought together all important scholars from related departments to study the antiquities of the excavations conducted at Andipatti and Modur. Dr. N. Marxia Gandhi, Assistant Superintending Epigraphist of our department delivered vote of thanks.

A large number of students from various city colleges participated in this seminar. Exhibited antiquities were explained to the visitors. It was a good learning experience for everybody.

# துறையில் நிகழ்ந்த சிறப்பு நிகழ்வுகள்

## இலங்கை நாட்டுத் தொல்லியல் அறிஞர் குழுவினரின் வருகை

இலங்கை நாட்டுத் தொல்லியல் அறிஞர் குழு ஒன்று இந்திய நாட்டிற்கும் இலங்கைக்குமிடையிலான பண்பாட்டுப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டிற்கு வருகை புரிந்தது. பேராதனைப் பல்கலைக்கழக தொல்லியல் பேராசிரியர், முனைவர். ஏ. எம். பியதிச சேனநாயகா அவர்களின் தலைமையின் கீழ் திருவாளர்கள், தாய் சிசிரா, துசிதா மந்த்ரி, இரசிகபண்டாரா, டி, ஏ. செனவரத்னா, துல்மா கருணாரத்னா, இனேகா தமயந்தி, பாலசூரியா, இரமணி குணவரத்னே, அனோமா பிரியந்தி விக்ரமசின்ஹா ஆகிய தொல்லியலறிஞர்கள் இக்குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

இக்குழுவினர் 20.4.05 அன்று தொல்லியல் துறைக்கு வருகை புரிந்தனர். அவ்வமயம் தொல்லியல் துறையின் சிறப்பு ஆணையர், திருமிகு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப. அவர்கள் தமது சிறப்புரையின் மூலம் அக்குழுவினருக்குத் தொல்லியல் துறையின் சிறப்புகளையும், சீர்மிகு செயல்பாடுகளையும் விரிவாக எடுத்தியம்பினார்கள். இக்குழுவினர் மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் அரண்மனையையும் கண்டு களித்தனர். தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம் முதலிய இடங்களிலுள்ள தொல்லியல் சின்னங்களையும் பார்வையிட்டனர்.

## ஐம்பை - ஓர் ஆய்வு நூல் வெளியீட்டு விழா

தொல்லியல் துறையின் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் கல்வெட்டு மற்றும் தொல்லியல் முதுபட்டயக் கல்வி (Post Graduate Diploma in Epigraphy and Archaeology) பயிலும் மாணவர்கள், தங்கள் படிப்பின் ஒரு பகுதியாக ஆய்வேடு ஒன்றினை சமர்ப்பித்து வருகின்றனர். இதுவரை இவ்வகையில் 163 ஆய்வேடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஆய்வேடுகளை வெளியிடுவதில் உள்ள தாமதத்தைக் கருத்தில் கொண்டு அவற்றுள் ஒன்றான 'ஐம்பை - ஓர் ஆய்வு' என்ற ஆய்வேடு வெளியிட வகைசெய்தோடு மேலும் அழகர்கோயில், திருச்செந்துறை ஆய்வேடுகள் வெளியிட தொல்லியல் துறையின் சிறப்பு ஆணையர் திருமிகு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர். இ.ஆ.ப., அவர்களின் சீரிய முயற்சியால் நிதிஒதுக்கீடு பெறப்பட்டு வழிவகுக்கப்பட்டுள்ளது. 'ஐம்பை ஓர் ஆய்வு' நூல்,

17-5-05 அன்று நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் வெளியிடப்பட்டது. இவ்வெளியீட்டு விழாவில் உதவி கல்வெட்டியல் கண்காணிப்பாளர் முனைவர் நா. மார்க்சீயகாந்தி அவர்கள் வரவேற்றுப் பேசினார். இத்துறையின் முன்னாள் இயக்குநர் முனைவர் இரா. நாகசாமி அவர்கள் ஐம்பையில் அதியமான் கல்வெட்டு கண்டறியப்பட்டதை நினைவு கூர்ந்து பாராட்டினார். சிறப்பு ஆணையர் அவர்கள், ஐம்பை ஆய்வேட்டின் அனைத்துப் பக்கங்களையும் தாம் ஆர்வத்துடன் படித்து அதனை நூலாக வெளியிட உறுதி செய்த மகிழ்ச்சியைப் புலப்படுத்தினார்கள். நூலாசிரியர் திரு. கா. செல்வராஜ் தமது ஏற்புரையில் தமது மாணவப் பருவ கால நினைவுகளை நினைவு கூர்ந்து ஆய்வேட்டை நூலாக வெளியிட்டமைக்கு நன்றி பாராட்டினார். சிறப்புநிலைக் கல்வெட்டாய் வாளர் முனைவர் சு. இராசகோபால் நன்றியுரை நவின்றார்.

## சிங்கள மொழியின் தோற்றம் குறித்த சிறப்புச் சொற்பொழிவு

27-5-05 வெள்ளிக்கிழமையன்று தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையின் கருத்தரங்க அறையில் சிங்கள மொழியின் தோற்றம் குறித்த சிறப்புச் சொற்பொழிவினை அரசு அருங்காட்சியகம் ஏற்பாடு செய் திருந்தது. இலங்கையிலுள்ள பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் சிங்களப் பேராசிரியர் திருமிகு கே. என். ஓ. தர்மதாசா அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். தொல்லியல் துறையின் சிறப்பு ஆணையர் திருமிகு தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று விழாவுக்கு சிறப்புச் சேர்த்தார்கள். தென்னிந்தியாவுக்கான இலங்கை நாட்டுத் துணை ஆணையர் அவர்களும், இலங்கை நாட்டு ஆய்வு மாணவர் களும் கலந்து கொண்டனர்.

## கல்வெட்டுப் பயிற்சி நிறுவன வகுப்புகள் தொடக்கவிழா

இவ்வருடம் 2005 ஜுன் மாதம் முதல் 2006 மே மாதம் வரை நடைபெறவிருக்கும் கல்வெட்டு பயிற்சிநிறுவனத்தின் பயிற்சி வகுப்புகளை 9-6-05 அன்று சிறப்பு ஆணையர் தொடங்கி வைத்துப் பேசினார். துறையின் ஒவ்வொரு பிரிவின் தலைவர்களும் தங்கள் பிரிவு பற்றி பேசி விளக்கம் அளித்தனர். முன்னதாக புதிய மாணவர்கள் தங்களை அறிமுகம் செய்து கொண்டனர். துறையின் ஆய்வு நடவடிக்கைகள் ஒளிப்படங்களாகக் கணிப்பொறி உதவியுடன் காட்டப்பட்டன.

# கோயம்புத்தூர் மாவட்டத் தொல்லியல் கையேடு நூல் வெளியீட்டு விழா

கோயம்புத்தூர், ஹுசூர் சாலையில் அமைந்துள்ள கொடிசியா அரங்கில், ''கோயம்புத்தூர் மாவட்டத் தொல்லியல் கையேடு'' என்ற நூலின் வெளியீட்டு விழா 13.06.05 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் திரு. சி. கோசலராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று நூலை வெளியிட, கோயம்புத்தூர் ஆர்.எஸ். புரத்திலுள்ள மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் தலைமை யாசிரியர் திரு. இ. உதயணன் முதற்படியினைப் பெற்றுக்கொண்டார். சிறப்பு நிலைக்கல்வெட்டாய்வாளர் முனைவர். சு. இராசகோபால் வரவேற்றுப்பேச, முனைவர். இரா. பூங்குன்றன் ஏற்புரை வழங்க. தொல்லியல் அலுவலர் திரு. பெ. கௌதமபுத்திரன் நன்றி நவின்றார். திட்ட அலுவலர் திரு. பொ. ஜெயபாலகிருஷ்ணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. உமாபதி, தமிழாசிரியர் திரு. சி. ராசியண்ணன், பேராசிரியர் இளங்கோவன் உட்படப் பலர் வாழ்த்திப் பேசினர்.

இவ்விழாவில் சிறப்புரையாற்றிய தொல்லியல் துறையின் சிறப்பு ஆணையர் திருமிகு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்கள், தொல்லியல் துறையால் 27 இடங்களில் அகழாய்வுகள் செய்யப்பட்டுள்ளமை குறித்தும், ஆண்டுக்கு இரண்டிடங்களில் அகழாய்வு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளமை பற்றியும், தொல்லியல் துறையால் 88 சின்னங்கள் பாதுகாக்கப்பட்டு வரப்படுவது குறித்தும், பழமை வாய்ந்த அரிய பொருட்களைப் பதிவு செய்து வருவது குறித்தும், ஊட்டியில் கல்வெட்டுப் பாதுகாப்பு மையம் செயல்பட்டு வருவது பற்றியும், தொல்லியல் துறைக்குட்பட்டதாகப் பதினான்கு அகழ்வைப்பகங்கள் செயல்பட்டு வருவது பற்றியும், பண்டைய காலத்தில் கொங்கு மண்டலம் வணிக மைய மாக விளங்கி, ரோமானியர்களுடன் நெருங்கிய வணிகத் தொடர்பு கொண்டிருந்தமை தொடர்பாகவும், இத்துறை தொடர்ந்து ஆய்வு நூல்களை வெளியிட்டு வருவது பற்றியும், தமது சிறப்புரையில் மிக விரிவாக எடுத்துரைத்தார்கள். வணிகத்திற்கும், கோயில்களுக்கும் கையேடு இருப்பதைப் போல மாவட்டந்தோறும் தொல்லியல் கையேட்டினை வெளியிட்டு வருவது குறித்தும் சிறப்பு ஆணையர் அவர்கள் விளக்கியுரை தார்கள். கோவை மாவட்டக் கல்வெட்டுகள் அனைத்தையும் தொகுத்து நூலாக வெளியிடவுள்ள தகவலையும் சிறப்பு ஆணையர் அவர்கள் இச்சிறப்புக் கூட்டத்தில் அறிவித்தார்கள்.

## அண்மைக்கால அகழாய்வுகள் கருத்தரங்கம், கண்காட்சி மற்றும் நூல்வெளியீட்டு விழா

*22-6-05 அன்று அரசு அருங்காட்சியக அரங்கில் அண்மைக்கால அகழாய்வுகள் தொடர்பான கருத்தரங்கம், தொல்பொருட் கண்காட்சி அழகன்குள அகழாய்வு குறித்த நூல் வெளியீட்டு விழா ஆகிய மூன்று சிறப்பு நிகழ்வுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு முப்பெரும் விழாவாக நடத்தப்பட்டது. தொல்லியல் துறையின் சிறப்பு ஆணையர் திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர் இ.ஆ.ப அவர்களின் சீரிய வழிகாட்டலில் மிகச் சிறப்பாக நடைபெற்ற இந்த முப்பெரும் விழாவுக்கு வருகை புரிந்த அனைவரையும் பதிவு அலுவர் திரு. கி. ஸ்ரீதரன் வரவேற்றுப் பேசினார். சிறப்பு ஆணையர் அவர்கள், இந்த முப்பெரும் விழாவின் இன்றியமையாச் சிறப்புகளைத் தமது அறிமுக உரையில் விளக்கிக் கூறினார். கல்வி மற்றும் வணிக வரித்துறை அமைச்சர் மாண்புமிகு சி. வி. சண்முகம் அவர்கள் கண்காட்சியைத் திறந்து வைத்தும், அழகன்குள அகழாய்வு நூலை வெளியிட்டும், தொல்லியல் துறையின் பணிகளைப் பாராட்டிப் பேசினார். ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறையின் சிறப்பு ஆணையர் திரு. அருண் இராமநாதன் இ.ஆ.ப., அவர்கள் நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். இந்த முப்பெரும் விழாவில் அருங்காட்சியகத்துறை இயக்குநர் திரு. அ. சித்திக் இ.ஆ.ப., அவர்களும், கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் திரு. ஆர். காசிநாதன் இ.ஆ,ப., அவர்களும், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர். ம. இராசேந்திரன் அவர்களும் பங்கேற்றனர். வரலாற்றுக்கு முந்தியகால அகழாய்வாளர் திரு. வெ. இராமமூர்த்தி நன்றி நவின்றார். சிறப்பு நிலை கல்வெட்டாய்வாளர் முனைவர். ஆ. பத்மாவதி, நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.*

# முனைப்புத்திட்டத்தில் கிடைத்த முத்துக்களில் சில

முனைப்புத் திட்டத்தின் கீழ் தமிழகக் கல்வெட்டுகளை விரைந்து படியெடுக்கும் பணி 2004 ஆகஸ்ட் திங்களில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் சிறப்பு ஆணையர் திரு.தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப. அவர்களின் சீரிய நிர்வாகப் பட்டறிவின் பயனாகத் தொடங்கப்பட்டு இதுவரை (ஜூலை 2005) படியெடுத்த கல்வெட்டுகளின் எண்ணிக்கை ஆறாயிரத்தைத் தாண்டியுள்ளது. படியெடுக்கப்பட்டு கல்வெட்டுகளின் வாயிலாகப் பல்வேறு புதிய செய்திகள் வெளிப்பட்டு வருகின்றன. சென்ற இதழ்களில் வெளியிடப்பட்டது போல அவற்றின் செய்திச் சுருக்கம் இங்குவெளியிடப்படுகிறது. இன்னும் பிறசெய்திகள் அங்கங்கு இவ்விதழில் பெட்டிச் செய்திகளாக வெளியிடப்பட்டுள்ளன.

## அகத்துறைப் பாடல் கல்வெட்டு

தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னமான திருவண்ணா மலை மாவட்டம் வந்தவாசி வட்டம் மடம் தாடகபுரீஸ்வரர் கோயிலில் 46 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் செங்கைப் புயல் சித்தநாதன் என்ற சிற்றரசனை ஒரு பெண் பாடுவது போலக் கவிஞர் ஒருவர் பாடிய கலித்துறைப் பாடல் ஒன்று கல்வெட்டாக உள்ளது. பாடல் பின்வருமாறு:

''கொங்கை புறஞ் சன்னிநிதி முத்திரையாகக் குறிக்கு மெங்கள்
சங்கைப் பிடிக்க பவனி வந்தான் தமிட்பாலி வல்லை
வங்கிப் புறங்கச்சி மாற்பேறு காவைவயற் பளூவூர்
செங்கைப் புயல் சித்தநாத னெங்கோன் சைவசே கரனனே''

சித்தநாதன் தமிட்பாலி, வங்கிபுறம், கச்சி, மாற்பேறு, காவைவயல், பளூவூர் ஆகியவற்றின் தலைவன், சிறந்த சைவன். அவன் உலாவந்த போது பெண்கள் மயங்கி பெருமூச்சுவிட மார்பு, சங்கு போன்ற கழுத்தினை முட்டியது. சைவன், வைணவ முத்திரையான சங்கினைப் பற்றினான் என்று பெண் வியக்கிறாள். இங்கு கொங்கை, கோயிலின் கருவறையையும் குறிக்கும். சங்கு வெற்றிச் சங்கைக் குறிக்கும். 15ஆம் நூற்றாண்டில் இப்பாடலைப் பாடிய கவிஞர் இரு பொருட்படப் பாடி யுள்ளார். தலைவனது வெற்றிச் சிறப்பும், மேனியழகும், சைவப்பற்றும் இதனில் வெளிப்படுத்தப்படுகின்றன.

**தகவல்:** திரு.ச. கிருஷ்ணமூர்த்தி, தொல்லியல் அலுவலர், திரு.சீ. இராம சந்திரன், சிறப்புநிலைக் கல்வெட்டாய்வர், சென்னை

## ஊற்றத்தூர் முக்குறுணி அளவுக் கல்தொட்டி


திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடி வட்டம் ஊட்டத்தூர் அருள்மிகு சுத்தரத்னேஸ்வரர் கோயிலில் முனைப்புத் திட்டத்தின்கீழ் 50க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட 150 × 82 × 20 செ.மீ. உள்அளவுள்ள ஒரு கல் தொட்டி குறிப்பிடத்தக்கதாகும். இதன் ஒரு பக்கத்தில் கி.பி. 13ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் ''ஸ்வஸ்திஸ்ரீ இந்தக் கிணறு மூன்று குறுணி'' என்று கல்வெட்டுள்ளது. 20 செ.மீ. ஆழமே உள்ள தொட்டி, கல்வெட்டில் கிணறு என்று சொல்லப்பட்டுள்ளது. குறுணி என்பது ஒரு மரக்கால் (8படி) அளவாகும். இன்று பயனற்றுத் தரையில் உள்ள இத்தொட்டி அன்று இடுப்பளவு உயர மேடையில் இருந்திருக்க வேண்டும். இத்தொட்டியை நகர்த்த இருபக்கங்களில் கல்லிலேயே குமிழ்கள் உள்ளன. பாத்திரத்தில் கொண்டு வந்து எண்ணெய், பால் நெய், போன்றவற்றை இதனில் வடிக்க கல்வெட்டுள்ள பக்கத்தின் மறுபக்கத்தில் நடுமேல் பகுதியில் ஒரு பள்ளமும், வெளியில் எடுக்க கல்வெட்டுப் பக்கத்தின் எதிர்புறமும், பக்கவாட்டிலும் கீழ்ப்பகுதியில் இருதுளைகளும் தொட்டியில் உள்ளன. இது போல தஞ்சைப் பெரிய கோயிலில் நீள் உருளை வடிவில் அளவீட்டுடன் இரு கல் தொட்டிகள் உள்ளன. ஸ்ரீரங்கத்தில் ஒரு மண்டபத்தில் 10 அடிக்கும் மேற்பட்ட ஆழத்தில் பெரிய, பெரிய தொட்டிகள் உள்ளன. மூன்று குறுணி அல்லது மூன்று மரக்கால் ஒரு பொதுவான கோயில் அளவாக இருந்திருக்க வேண்டும். மதுரையில் திருமலை நாயக்கர் செய்து வைத்த பெரிய விநாயகப் பிள்ளையாருக்கு முக்குறுணிப் பிள்ளையார் என்ற பெயர் இன்றும் நிலவுகிறது.

தகவல்: திரு. கி. ஸ்ரீதரன், பதிவு அலுவலர், சென்னை; திரு. கோ முத்துச்சாமி, காப்பாட்சியர், தரங்கம்பாடி.


## மள்ளபுரம் தீப்பாய்ந்த அம்மன்

மதுரை மாவட்டம் பேரையூர் வட்டம் எம். கல்லுப்பட்டிக்கருகில் மள்ளபுரம் உள்ளது. இவ்வூரில், கி.பி. 1525 (கலியுகம் 4625)இல் பூவி லிறங்கித் தெய்வீகமான வீரரா(க்)கம்மாள் என்பவரின் நினைவாக, கி.பி.1830இல் கோயில் ஒன்று கட்டப்பட்டுள்ளது. மள்ளபுரத்தைச் சேர்ந்த சிவல் சின்னப்பரெட்டியார் என்பவர் இறந்ததும், அவரது மனைவியான இவர் தீப்புகுந்து உயிர் துறந்த செய்தி மதுரை தல புராணத்திலிருந்து எடுக்கப்பட்டதாக இக்கோயிலிலுள்ள கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இக்கோயிலைக் கட்டும் பணியைச் சந்தையூர் கன்னார் பட்டி பூசாரி திருப்பதி ரெட்டியார குடிகளும், மேமாந்தை பூசாரி சின்னப்பரெட்டியார் குடிகளும் சேர்ந்து, பாப்பு ரெட்டியார் என்பவரை முதன்மையாய் வைத்து முடித்துள்ளனர் என்றும் இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

தகவல்: முனைவர் பொ. இராசேந்திரன், முனைவர் வெ. வேதாசலம், சிறப்புநிலைக் கல்வெட்டாய்வாளர்கள், மதுரை.



அண்மைக்கால அகழாய்வுகள் குறித்த கண்காட்சியை மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் 22.6.05 அன்று திறந்து வைத்துப் பார்வையிட்டார்கள்



மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் அழகன் குளம் அகழாய்வு ஆங்கில நூலை 22-06-05 அன்று வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார்கள்